

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:03, Pages:56
OCTOBER-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
அக்டோபர் 2024,
விலை ரூ.20/-

## திருமலையப்ப ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்

04-10-2024 முதல் 12-10-2024 வரை

(கருட சேவை : 08-10-2024)




## திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
## 2024 அக்டோபர் 04 முதல் 12 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 03-10-2024 | வியாழன் | -- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 04-10-2024 | வெள்ளி | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 05-10-2024 | சனி | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 06-10-2024 | ஞாயிறு | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 07-10-2024 | திங்கள் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 08-10-2024 | செவ்வாய் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 09-10-2024 | புதன் | ஹனுமத் வாகனம், மாலை:வஸந்தோத்ஸவம், தங்கத்திருத்தேர் | யானை வாகனம் |
| 10-10-2024 | வியாழன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 11-10-2024 | வெள்ளி | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 12-10-2024 | சனி | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம், சக்கர ஸ்நானம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |



*அவிநாசி து தத்$_3$வித்$_3$தி$_4$*
*யேந ஸர்வமித$_3$ம் ததம் ।*
*விநாசமவ்யயஸ்யாஸ்ய*
*ந கச்சித்கர்துமர்ஹதி ।।*



அழிவற்றதுதான் என்று ஜீவாத்மாவை அறிந்து கொள். எதனால் காணப்படும் பொருட்கள் அனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அழிவற்றதற்கு அழிவை உண்டாக்குவதற்கு எவரும் ஆற்றல் பெற்றவரல்லர்.

*– ஶ்ரீமத் பகவத் கீதை 2–17*

*த்வயி பஹுமதி ஹீந: ஶ்ரீநிவாஸாநுகம்பே*
*ஜகதி கதிமிஹாந்யாம் தேவி ஸம்மந்யதே ய: ।*
*ஸ கலு விபுத ஸிந்தௌ ஸந்நிகர்ஷே வஹந்த்யாம்*
*சமயதி ம்ருகத்ருஷ்ணா வீசிகாபி: பிபாஸாம் ।।*

ஶ்ரீநிவாஸனுடைய கருணா தேவியே! இவ்வுலகில் எவன் உன்னிடம் பெருமதிப்புக் கொள்ளாதவனாய், வேறு தெய்வத்தைப் பெரிதாய் நினைக்கின்றானோ, அவன் தேவகங்கை அருகில் பெருகிக் கொண்டிருக்கும்போது, கானலாற்றின் அலைகளால் தாகத்தைத் தணிப்பவனாக ஆவான் அல்லனோ!

*- தயாசதகம் 40*

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- "ஸப்தகிரி" திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- "ஸப்தகிரி" இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- "ஸப்தகிரி" இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளிவருகின்றன.
- "ஸப்தகிரி" இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக்கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- "ஸப்தகிரி" சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றைச் சரியாக குறிப்பிடவும்.
- "ஸப்தகிரி" இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலகப் பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியில் திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்




மேலும் தகவல்களுக்கு **0877-2264543, 2264359**

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2024

மலர் 04
இதழ் 03




## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| திருமாடவீதிகளில் ஆழ்வார்கள் மங்களாசாசனம் - ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், திருமலை. | 7 |
| உலகத்தின் திலகம் திருவேங்கடம் - திரு. காயார் கோமடம் சேஷாத்ரிதாசன், காஞ்சிபுரம். | 11 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: திருமலை வாசமும் பிரம்மோத்ஸவமும் எதற்கு? -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 14 |
| வேங்கடாசல நிலையம்... - திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 17 |
| வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு - திரு. கிடாம்பி நாராயணன், சென்னை. | 20 |
| மன்னனின் மகிழ்ச்சியில் மலையப்பன் - திரு. எஸ்.கிருஷ்ண மூர்த்தி, செய்யார். | 23 |
| தயாதேவியின் தயை - திரு. ராமசேஷசயணன், இளையாண்டிப்பட்டு. | 25 |
| திருமலை தரிசனம் - திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: நவராத்திரி விழா நாயகி - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 34 |
| ஸ்ரீஸ்ரீநிவாசா கோவிந்தா... - திரு. பரந்தாமன், திருப்பதி. | 36 |
| புரட்டாசியில் பெருமாள் வழிபாடு - திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை. | 38 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 42 |
| அலிபிரி அடிவாரத்தில்... திருமதி எஸ்.திருவேணி, நங்கைநல்லூர். | 44 |
| ராசிபலன்கள் : அக்டோபர் 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| குமரியில் திருமலையப்பனின் திருலீலை - திரு. அ.கிருஷ்ணன் , வீரவநல்லூர். | 48 |
| சித்திரக்கதை : ஆணவம் கொள்ளாதே! | 52 |


### வாசகர்களுக்கு...

இவ்விதழ் திருமலை பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் பல இடம்பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

-பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : கருட வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி.

பின்னட்டை : சக்கர ஸ்நானம், திருமலை.


சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்





# திருவோணத் திருவிழாவினைக் காண வாருங்கள்!

**"பின்னிட்ட சடையானும் பிரம்மனும் இந்திரனும் துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல், மின்வட்டச் சுடராழி வேங்கடக் கோன்...''** என்று குலசேகராழ்வார் போற்றும்படி சிவபிரானும், பிரம்மனும், இந்திரனும் கலியுக வைகுந்தமான திருமலை நீள் வாசலில் நுழைந்து திருவேங்கடவனைத் தரிசிக்க விழைகின்றனர். அந்த பரம்பொருளோ தன்னுடைய அவதாரத் திருநாளை முன்னிட்டு பக்தர்களுக்குத் திருக்காட்சி அளிக்க திருமாட வீதிகளில் எழுந்தருளுகிறார். பிரம்மன் முன்னின்று நடத்தும் உத்ஸவமான இந்த பிரம்மோத்ஸவத்தைக் கொண்டாட கருடாழ்வான், அனைத்து லோக வாசிகளையும் வாருங்கள்! வாருங்கள்!! என்று அழைக்கிறான். ஆதலால்தான் பிரம்மோத்ஸவத்தின் முதல் நாளான கொடி ஏற்றத்தின்போது கருடக் கொடியை ஏற்றுவது வழக்கம். அதாவது அனைத்து தேவாதி தேவர்களையும் இந்த பிரம்மோத்ஸவத்திற்கு அழைப்பு விடுவிப்ப தாகவும் அமைந்துள்ளது. இந்த அழைப்பினை ஏற்று அனைவரும் பிரம்மோத்ஸவ வைபவத்தினைக் கண்ணாரக் கண்டு களிக்க ஆர்வத்துடனும் பக்தியோடும் இத்திருமலைக்கு ஓடி வருகின்றனர்.

இங்ஙனம் வருகை தரும் மக்கள் முதன்முதலில் ஓங்கி உயர்ந்த மலைச் சிகரத்தின் அடியில் உள்ள அலிபிரி அடிவாரத்தில் பக்தர்களை வரவேற்கும் விதமாக தன்னுடைய இரு கரங்களையும் கூப்பி வணங்கிய படி வீற்றிருக்கும் கருடாழ்வானை வணங்கி விட்டு திருமலைக்குச் செல்லத் துவங்குவர்.

திருவேங்கடவனின் வெவ்வேறு வாகனச் சேவையைக் காண பக்தர்கள் மலை வழியில் பயணிக்கும் போது வாகனங்கள் எழுப்பும் ஒலிகளைக் கூட கோவிந்த நாமமாகவே எண்ணுவர். நடைபாதையிலும் படி ஏறுவது சிரமத்துடன் இருந்தாலும் பக்தர்களின் கோவிந்த நாம ஒலி எல்லோரையும் சுறுசுறுப்பாக்கி விடும்.

திருமலை ஏறியவுடன் அந்தத் திருமலையின் அழகினைக் கண்டவுடன் பயணத்தால் உண்டான சோர்வு கூட நீங்கி விடும். கோவிந்த நாம ஒலியைச் சுமந்து கொண்டு வரும் இயற்கையான அந்த காற்று நம் மீது பட்டவுடன் நமது சுவாசம் மட்டுமின்றி மனதும் புத்துணர்ச்சியைப் பெற்றிடும். அது மட்டுமின்றி அம்மலையில் எங்கு காணினும் பக்தர்கள் ஒருவரை ஒருவர் "கோவிந்தா" என்றே பெயரிட்டு அழைப்பர்.

நாத நீராஜன அரங்கிலும், ஆஸ்தான மண்டபத்திலும் ஆன்மீகச் சொற்பொழிவு, சங்கீதம் மற்றும் கலை நிகழ்ச்சிகள், எங்கு காணினும் மண விருந்து போன்று ஸ்வாமியின் அன்னப்பிரசாத வினியோகமும், ஆங்காங்கே மணம் கமழும் மலர் அலங்காரங்களும் காணும்போது நம்மில் பக்தி மேலிடும். திருமலையில் திருமாட வீதிகளில் ஸ்வாமியின் வாகன சேவையின் போது "பஜனைக் குழுக்கள், கோலாட்டங்கள், பிரபந்த கோஷ்டியினர், மங்கல வாத்தியங்கள் என முழங்கி கொண்டிருக்க, எம்பெருமானும் நாள்தோறும் வெவ்வேறு வாகனங்களில், வெவ்வேறு அலங்காரங்களில் தன்னை நாடி வந்த பக்தர்களுக்கு திருக்காட்சி அளிக்கும் அழகினைக் காண கண் கோடி வேண்டும். இதனை நேரில் காண்போர் பெரும் பாக்கியம் பெற்றோராவர் என்றே கூறலாம். நேரடியாக வர இயலாதவர்கள் தி.தி.தே. எஸ்.வி.பி.சி. சேனல் வாயிலாக வாகனச் சேவைகளைக் கண்டும் பாக்கியசாலிகளாகலாம்.

**''காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர ஓணவிழவிலொலியதிர - பேணி வருவேங்கடவா! என்னுள்ளம் புகுந்தாய் திருவேங்கடமதனைச் சென்று''** என்று திருமழிசை ஆழ்வாருடைய ஆசைக்கிணங்க நாமும் ஸ்வாமியை அகத்திலோ, புறத்திலோ வைத்து வணங்கி அவன் திருநாமமான "கோவிந்த" நாமத்தை மனதாரத் துதிப்போம்! அவன் இன்னருளைப் பெறுவோம்!!


# திருமாடவீதிகளில் ஆழ்வார்கள் மங்களாசாசனம்

**திருவோண விழாவில் திருமலை மாடவீதிகளில் ஆழ்வார்கள் அருளிச் செயல் சேவிக்கும் முறையை ஸப்தகிரி வாசகர்களுக்காக திருமலை ஸ்ரீஸ்ரீஸ்ரீபெரிய ஜீயர் சுவாமிகள் அருளியது...**

*குன்றமேந்தி குளிர்மழைக் காத்தவன்*
*அன்று ஞாலம் அளந்தபிரான் - பரன்*
*சென்று சேர் திருவேங்கடமாமலை*
*ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே*

– திருவாய் மொழி.

திருமலையில் எழுந்தருளியிருக்கின்ற திருவேங்கட முடையானுக்கு ஒவ்வொரு வருடமும் (வைகானச ஆகமப்படி) பிரம்மோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அந்த பிரம்மோத்ஸவத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினுடைய தர்ம கர்த்தாவாக விளங்கக்கூடிய ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய கோவில் கேள்வி அப்பன் சடகோப ராமாநுஜ ஜீயர் சுவாமி களின் தலைமையில் வாகன சேவையின்போது பன்னிரு ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்கள் திருமாட வீதிகளில் பாராயணம் செய்யப்படுகின்றன. இது ஸ்வாமி எம்பெருமானார் ஏற்படுத்திய முறை ஆகும். இந்த வாகன சேவையின் போது இந்த திவ்யப் பிரபந்தம் தான் சேவிக்க வேண்டும் என்பது இராமாநுஜருடைய நியமனம், கட்டளையும் ஆகும். அந்தநாள் தொடங்கி இந்தநாள் வரையிலும் இந்த வழிமுறையினை இங்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் விசேஷமாக கடைபிடித்து, அதே முறையில் எம்பெருமான் திருவேங்கடமுடையானைச் சேவித்து சேவை செய்து வருகின்றனர்.



பகவத் இராமாநுஜருடைய தாய்மாமன் திருமலை நம்பிகள் ஆவார். இவர்தான் எம்பெருமானாருக்கு எல்லாமே. இவரிடத்தில் ஸ்ரீமத் இராமாயண காலக்ஷேபம் கேட்டார். அவரிடத்தில் இருக்கின்ற பக்திக்கிணங்கி திருமலை நம்பிகள் சன்னதி அருகில் குருராலபாகவில் இருந்து திவ்யப் பிரபந்தமும்,வேதமும் பாராயணம் செய்யத் தொடங்க வேண்டும் என்பது எம்பெருமானாருடைய கட்டளை ஆகும். ஆக, எம்பெருமான் திருவேங்கட முடையான் உற்சவத் திருமேனியான திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவியோடு வாகன மண்டபத்திலிருந்து பெரிய சேஷ வாகனத்



தில் பவனி வந்து கிழக்குத் திருமாட வீதியிலிருந்து தெற்குத் திருமாட வீதியில் திரும்பி, திருமலை நம்பிகள் சன்னதிக்கு அடுத்தப்படியாக, குருராலபாக அதாவது குதிரை மண்டபத்திற்கு அருகில் ஸ்வாமி வந்து நின்ற பிறகு, ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், ஏகாங்கிகள், ஆசார்ய புருஷர்கள் மற்றும் இதர ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோரும் கோஷ்டியாக இருக்க ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள் "சாதித்தருளாய்" என்று தொடங்கிய உடன் "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" தனியன்கள் எல்லாம் சேவிப்பது திருமலையில் நடக்கும் க்ரமம்.

அதன் பிறகு முதலாழ்வார்களில் முதலாவதாக இருக்கக்கூடிய பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி என்கிற திவ்யப் பிரபந்தத்தைத் தொடங்குவர். இதற்குத் "தொடக்கம்" என்று பெயர். அந்தத் தொடக்கத்தில் முதல் பாசுரத்தை எம்பெருமான் முன்னிலையில் விண்ணப் பித்து, அதற்கு பிறகு எல்லோரும் கோஷ்டியாக திருமாட வீதியைப் பிரதக்ஷிணம் செயதபடி 100 பாசுரங்களையும் பாராயணம் செய்வர். அதோடு பெரியாழ்வார் அருளிச் செய்த பெரியாழ்வார் திருமொழி என்கிற திவ்ய பிரபந்தத்திலிருந்து 20,30 அல்லது 40 பாசுரங்கள் சேவிப்பர்.

பெருமாள் வாகன மண்டபத்தில் எழுந்தருளிய பிறகு ஜீயர் சுவாமிகளோடு எல்லோரும் ரங்கநாயக மண்டபத்தில் அமர்ந்து மீதமுள்ள பாசுரங்களைச் சேவிப்பர். வாகன மண்டபத்தில் வேத பாராயணம் முடித்த பின்னர் பெருமாள் அங்கிருந்து தோளுக்கினியானில் அதாவது திருச்சியில் எழுந்தருளி ஆலய மஹா துவாரத்தைக் கடந்து, திருமாமணி மண்டபத்தில் முதல் திருவந்தாதியில் கடைசியாக இருக்கக்கூடிய இரண்டு பாசுரங்களைச் சாத்துமுறை பண்ணுவார்கள். பின்னர் எல்லோரும் விழுந்து சேவிப்பர். அதன் பிறகு ஸ்ரீபாஷ்யகாரர் சன்னிதியில் இயல்சாற்று நடைபெறும். ஒவ்வொரு வாகனத்தின் போதும் நடக்கக்கூடிய க்ரமமானது இங்கு நிறைவடையும்.



இதே போன்று இரண்டாம் நாள் காலையில் சிறிய சேஷ வாகனத்தின் போது பூதத்தாழ்வார் அருளிச் செய்த இரண்டாம் திருவந்தாதியும், பெரியாழ்வார் அருளிச் செய்த பெரியாழ்வார் திருமொழியுமாக திருமாட வீதிகளில் சேவித்துக் கொண்டு வருவர். இதே கிரமமாகத்தான் நாள் தோறும் வாகன சேவையின்போது நடைபெறும். *"தொடக்கம்"* ஆரம்பித்து ஒரு பாசுரத்தை விண்ணப்பிப்பர். விக்ஞாபனம் பண்ணுவர். அதன் பிறகு திருமாட வீதிகளில் சேவித்துக் கொண்டு வருவர். கடைசியில் சாத்துமுறையாக இரு பாசுரங்களைச் சேவிப்பர். அன்று இரவு ஹம்ச வாகனத்தின் போது 2ஆம் திருவந்தாதியைச் சேவிப்பர்.

மூன்றாம் நாள் காலையில் திருமலையப்ப ஸ்வாமி சிம்ம வாகனத்தில் எழுந்தருளும்போது பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாம் திருவந்தாதியும், பெரியாழ்வார் திருமொழியில் இருந்து சில பாசுரங்களும் சேவிப்பர். அன்று இரவு முத்துப்பந்தல் வாகனத்தின்போதும் 3ஆம் திருவந்தாதியைத்தான் சேவிப்பர்.

நான்காம் நாள் காலையில் கல்ப விருக்ஷ வாகனத்

தின் போது திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த நான்முகன் திருவந்தாதியும், பெரியாழ்வார் திருமொழியில் இருந்து சில பாசுரங்களும், அன்று இரவு சர்வ பூபால வாகனத்தின் போதும் நான்முகன் திருவந்தாதியைச் சேவிப்பர்.

ஐந்தாம் நாள் காலையில் திருமலையப்ப ஸ்வாமி மோகினி அலங்காரத்தில் பல்லக்கில் எழுந்தருளும்போது நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தமும், பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர். இரவு பறவையேறு பரம்புருடனான திருமலையப்ப ஸ்வாமி கருட வாகனத்தில் எழுந்தருளும்போது நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தமும், பெரியாழ்வாரின் பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர்.

ஆறாம் நாள் காலையில் அனுமத் வாகனத்தின் போது நம்மாழ்வார் அருளிச் செய்த பெரிய திருவந்தாதியும், பெரியாழ்வாரின் பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர். அன்று இரவு யானை வாகனத்தின் போது பெரிய திருவந்தாதியும், பெரியாழ்வார் திருமொழியும் சேவிப்பர். ஆறாம் நாள் இரவோடு பெரியாழ்வார் அருளிச்செய்த பிரபந்தம் நிறைவுறும்.

ஏழாம் நாள் காலையில் சூரியப்பிரபை வாகனத்தின்போது திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழியில் முதல் பத்தில் 80 பாசுரங்களைச் சேவிப்பர். *"வாடினேன் வாடி"* எனும் பாசுரத்தில் தொடங்கி 80வது பாசுரத்தோடு முடிப்பர். அன்றிரவு சந்திரப் பிரபை வாகனத்தின்போது பெரிய திருமொழியில் முதல் பத்தில் ஒன்பதாவது திருமொழியில் *"தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும்"* என்னும் பாசுரத்தில் தொடங்குவார்கள். அதேபோன்று சேவித்துக் கொண்டு பெரிய திருமொழியில் மூன்றாம் பத்தில் இருபது பாசுரங்களோடு முடிப்பர். அதாவது அவை தில்லை திருசித்ர கூடத்துப் பாசுரம். கோவிந்த ராஜனின் பாசுரமாகும். கோவிந்தராஜனுக்கும், திருவேங்கடமுடையானுக்கும் இருக்கின்ற சம்மந்தத்தை இங்கு நன்கு காண்பிக்கின்றார்கள். இதனை மூன்றாம் பத்து இருபது பாசுரத்தோடு முடிப்பர்.



**சூடிக்களைந்த மாலை**

**பிரம்மோத்ஸவத்தில் மிகவும் பல சிறப்புகள் நிறைந்த கருட சேவை ஐந்தாம் நாள் நடைபெறும். அன்று ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆண்டாள் (கோதை) சூடிக்களைந்த மாலையை கோவிந்தனுக்காக அனுப்புவர். அம்மாலையை கருடசேவையின் போது திருமலையப்ப ஸ்வாமிக்கு அணிவிக்க, ஸ்ரீஸ்ரீஸ்ரீபெரிய ஜீயர் சுவாமிகள் தம் சிரசில் சுமந்து கொண்டு வருவார்.**

எட்டாம் நாள் காலை திருமலையப்ப ஸ்வாமி திருத்தேரில் பவனி வரும்போது பெரிய திருமொழி மூன்றாம் பத்தில் மூன்றாவது திருமொழியில் இருக்கக் கூடிய *"வாட மருதிடை போகி மன்ன..."* எனத் தொடங்கும் படியான பாசுரத்தை ஆரம்பிப்பர். திருத்தேர் பவனி எவ்வளவு நேரம் ஆகின்றதோ அவ்வளவு நேரமும் பெரிய திருமொழி முழுவதும் சேவிக்கப்படும்.

அதன் பிறகு நம்மாழ்வாருடைய திருவாசிரியம், திருமங்கை ஆழ்வாருடைய திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் சேவிக்கப்படும். பிறகு திருத்தேரில் சாத்துமுறை பெரியாழ்வார் திருமொழி கடைசியில் *"தடவரவாய்"*, *"வேயர்தங்கல்"* என்கிற இரு பாசுரங்களும், பெரிய திருமொழியில் கடைசியாக இருக்கக்கூடிய *"நந்தா நரகத்து"*, *"குன்னமெடுத்து"* என்கிற இரு பாசுரமும் சேவித்து பல்லாண்டு, இயல்சாத்து, மணவாள மாமுனிகள் வாழி திருநாமத்தைச் சொல்லி முடிப்பர்.

அன்றைய இரவு அஸ்வ வாகனத்தின் போது ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழி என்கிற திவ்யப் பிரபந்தத்தைச் சேவிப்பர்.

ஒன்பதாம் நாள் காலை பல்லக்கு. மூன்று மணியளவில் பல்லக்கு மற்றும் சூர்ணாபிஷேகம் நடைபெறும்போது குலசேகராழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழி, திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த திருச்சந்த விருத்தம், தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச் செய்த திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரான், மதுரகவியாழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு, திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்கிற பிரபந்தங்களை இரண்டு புறப்பாடுகளிலும் சேவிப்பர். அதன் பிறகு தீர்த்த வாரி நடைபெறும்.

தீர்த்தவாரி ஆன பின்னர் உற்சவருக்கு தோமாலை நடைபெறும்போது திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை, திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு, கோயில் திருவாய்மொழி, இராமாநுஜ நூற்றந்தாதி, உபதேச ரத்தினமாலை நடைபெற்றவுடன் நாலாயிர சாத்துமுறையும் நடைபெறும்.

அன்றைய இரவு துவஜாவரோஹண புறப் பாட்டின் போது திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த இராமாநுஜ நூற்றந்தாதி என்கிற திவ்யப் பிரபந்தத்தை அனுசந்தானம் பண்ணுவர். அது போன்றே இரவும் அங்கு சாத்துமுறையும் நடைபெறும். இப்பிரம்மோத்ஸவ விழாவின் ஒன்பது நாட்களிலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்களை ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளின் தலைமையில் தொடக்கமும் முடிவும் முதல் நாள் க்ரமம் போன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் சேவித்து எம்பெருமானுடைய அனுக்ரகத்தைப் பெறுவார்கள்.

ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்ட திவ்யப் பிரபந்தத்தை அனுசந்தித்தோமேயானால் 108 திவ்ய தேசங்களிலும் அர்ச்சா மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய பரிபூரணமான அருளுக்கு நாம் பாத்திரர்கள் ஆகலாம்.

அதேபோன்று பக்தி, சரணாகதி என்கிற இரண்டு உபாயங்களும் விருத்திடையும். ஸ்ரீமந்நாத முனிகள் இந்தத் திவ்ய பிரபந்தங்களுக்கு அழகாக ராகத்தையும், தாளத்தையும் அமைத்து நமக்குக் கொடுத்தார். இதனால் ஒரு ஆத்மானந்தம், ஆத்ம திருப்தி கிடைக்கும். சிரவாணானந்தம் கிடைக்கும். எல்லாவித ஆனந்தமும் கிடைக்கும்.

முக்கியமாக இந்த நாலாயிர திவ்யப் பிரபந் தத்தை நாம் பிரம்மோத்ஸவ சமயத்தில் சேவிக்கும் போது அந்த எம்பெருமானுடைய பரிபூரணமான அருளும், இகத்திலும் புறத்திலும் நமக்கு சகல விதமான சௌபாக்கியங்களும் உண்டாகும் என்பது திண்ணம்.

*ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்*






**கரிவரத ராஜ ஸ்வாமி ஆலயத்தை கார்வேட்டி நகர அரசர்கள் கட்டினர். முதலையிடம் அகப்பட்ட கஜேந்திரனைக் காக்க வந்த ஸ்ரீவரதன் அந்த முதலையைத் தனது சக்ராயுதத்தால் அழித்தார். கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்ததால் அன்று முதல் "ஸ்ரீகரிவரத ராஜ ஸ்வாமி" என்றே இந்தப் பகுதியில் பூஜிக்கப்பட்டு வருகின்றார். இந்த ஆலயத்தில் சுமார் 158 ஆண்டுகளாக கஜேந்திர மோக்ஷ உற்சவம் மிக வைபவமாக நடைபெற்று வருகின்றது. 16-10-2024 புதன் கிழமையன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி, 17-10-2024 வியாழக்கிழமை அன்று பவித்ரோத்ஸவம், பூர்ணாஹுதி (ஐப்பசி மாதம்) நடைபெறுகின்றது**

**ஸ்ரீபூநீளா தேவி உடனுறை ஸ்ரீகரிவரத ராஜ ஸ்வாமி ஆலயம்**



# திருவேங்கடம்

## உலகத்தின் திலகம்

நம்மாழ்வார் நம் திருவேங்கடமுடையானை யும், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திரு வேங்கடமலையையும் பலவாறு பாடிப் பரவி உள்ளார். திருவாய் மொழியில் இடம் பெற்றுள்ள ஓர் அற்புதமான பாசுரம் நமது சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருப்பதை இங்கே காணலாம்.

*"உலகம் உண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி அம்மானே!*
*நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி! நெடியாய்! அடியேன் ஆருயிரே!*
*திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து*
*எம்பெருமானே!*
*குலதொல் அடியேன் உனபாதம் கூடுமாறு கூறாயே!"*

"பிரளயகாலத்தில் உனது படைப்பில் உள்ள அண்டசராசரங்கள் அனைத்தையும் உனது வயிற்றில் அடக்கிக் கொண்டு ஆலிலையில் பள்ளி கொண்டவனல்லவ னாகியனது கீர்த்தி அழியாது நிலைபெற்ற தாகும். மிகுந்த ஒளியுடன் தேஜோமயமாய் நீ விளங்குகின்றாய்! வாமனாவதாரத்தில் நெடுமாலாக வளர்ந்து மூவுலகங்களையும் உனது திருவடியால் அளந்த நீயே அடியே னுடைய உயிருக்கு உயிராகத் திகழ்கின் றாய்.

இப்பூவுலகிற்கே ஒரு திலகமாக விளங்குகின்ற இத்திருவேங்கடமலை மீது எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! பன்னெடுங்காலமாக உன்னையே நம்பி இருக்கும் இவ்வடியவனை உனது திருவடிகளில் சேருமாறு அழைப்பா யாக!" என்று இப்பாசுரத்தில் மனம் உருகி வேண்டிக்கொள்ளும் நம்மாழ்வார் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலையை ஒரு திலகமாக வர்ணனை செய்துள்ள விதம்தான் நமது சிந்தனை யைத் தூண்டுகின்றது.

*"எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம்!"* என்பது நாம் அனைவரும் அறிந்த பழமொழியாகும். சிரசு எனப்படும் அந்தத் தலையின் முன் பக்கமாகிய முகம், அதிலுள்ள நாசி, உதடுகள், பற்கள், கண்கள், அவற்றின் மேல் அமைந்த இமைகள், புருவங்கள், இரண்டு புறங்களிலும் விளங்கும் காதுகள் ஆகியவை ஒருவருடைய புற அழகுக்கு அழகு சேர்ப்பவையாகும். இவற்றுக் கெல்லாம் மேலாக அமைந்த நெற்றி அவரு டைய புற அழகுடன் அக அழகுக்குக் காரண மாகிய ஞானத்தையும் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

பொதுவாகவே விசாலமாக அமைந்த நெற்றியானது ஒருவருடைய ஞானம், கம்பீரம் ஆகிய இரண்டின் அடையாள மாகக் கருதப்படுகிறது. ஒருவருடைய நெற்றி சுருங்கி இருந்தால் அவர் ஆழ்ந்த சிந்தனை, கவலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதை யும், சுருக்கமற்று விரிந்து காணப்படும் நெற்றி அம்மனிதரின் தெளிந்த சிந்தனை, மகிழ்ச்சி ஆகியவற்றில் திளைப்பதையும் வெளிப் படுத்துகின்றது.

நமது பாரதக் கலாச்சாரமானது ஒரு மனிதரின் நெற்றியை அதன் அகலத்தை யும், சுருக்கத்தையும் மட்டுமே எண்ணி மதிப்பிடுவதில்லை. அந்த நெற்றியின் மீது வீற்றிருக்கும் ஆன்மீகக் குறியீட்டை வைத்தே மனிதர்கள் மதிப்பிடப் படுகின்றனர்.

ஆம். *"நீறில்லா நெற்றி பாழ்"* என்பது தமிழ் கூறும் நல்லுலகில் அறிவுரை ஆகும்.



# திருமலையில் அங்கப்பிரதக்ஷணம்



**வேண்டுதல்கள் பல இருந்தாலும் மெய் வருத்திச் செய்யும் வேண்டுதல்களில் முதலிடம் வகிப்பது அங்கப்பிரதக்ஷணமே ஆகும். இதனால் ஆன்மீகத்தோடு தேகபலம் கூடும்.**

**அங்கப்பிரதக்ஷணம் என்றால் சாம்பிரதாய உடை உடுத்திக்கொண்டு, புஷ்கரணியில் மூழ்கிய பின்னர் ஈர உடையுடன்(கிடந்த நிலை) படுத்து, தமது தலைக்கு மேலே இரு கரங்களையும் கூப்பி வணங்கியப்படி ஸ்வாமி கருவறை அல்லது கோயில் பிரகாரத்தைச் சுற்றி வருவதே ஆகும். ''கோவிந்தா... கோவிந்தா...'' எனும் கோஷத்துடன் அதிகாலையில் 3.00 மணிக்கு சுப்ரபாதம் நடைபெறும் போது மனதுக்குக் கிடைக்கும் நிறைவு எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது.**

**தி.தி.தே. இணையதளம் வாயிலாக அங்கப்பிரதக்ஷணம் டிக்கெட்டுகள் மூன்று மாதங்களுக்கு முன்னர் பதிவு செய்துக்கொண்டு திருமலை ஆலயத்தில் அங்கப்பிரதக்ஷணம் செய்யலாம்.**



இவ்விடத்தில் ''நீறு'' என்பது நெற்றியில் அணிகின்ற திருநீற்றைக் குறிக்கின்ற அதே சமயம், தாங்கள் வழிபடும் தெய்வங்கள் சார்ந்த சமயக் குறிகளை இட்டுக் கொள்ளாத ஒவ்வொருவரின் நெற்றியும் பாழ் நெற்றியே என்பதாகவே கொள்ள வேண்டும். ஷண்மதங்களும், மூன்று சித்தாந்தங்களும், தழைத்து வளர்ந்துள்ள புண்ணியமான நமது பாரத பூமியில் திருநீற்றுப்பட்டை, குங்குமம், சந்தனம், கோபி சந்தனம், கஸ்தூரித் திலகங்கள், திருமண் காப்பு ஆகியவை நம்மில் பெரும்பாலானவர்களின் நெற்றிகளை ஆயிரமாயிரமாண்டுகளாக அலங் கரித்து வருகின்றன.

இவ்வளவு ஏன், நாம் அனைவரும் நாள்தோறும் வழிபடுகின்ற திருக்கோயில்களில் உறையும் மூல மூர்த்திகள் உற்சவ மூர்த்திகள் அனைவரின் திருநுதல்களையும் திருமண், திலகம், திருநீறு ஆகியவைதானே அலங்கரிக்கின்றன.

இதைக் கருத்தில் கொண்டுதான் நம்மாழ்வார் எண்சாண் உடம்புக்கும் பிரதானமாகக் கருதப்படுகின்ற சிரசாக அதாவது தலையாக நம் திருமலையைக் குறிப்பிடாமல், அத்தலையின் முற்பகுதியில் பிரதானமாக விளங்கும் நெற்றியில் வைக்கப்பட்டிருக்கும் திலகமாகவே வர்ணனை செய்து மகிழ்கின்றார். *''திலதம் உலகுக்கு ஆய் நின்ற திருவேங்கடம்''* என்றதன் மூலம் சாக்ஷாத் பூமாதேவியின் திருநுதலில் உள்ள திலகமே நம் திருவேங்கடம் என்று வர்ணிக்கின்றார் நம்மாழ்வார்.

திருவேங்கடமலையே ஒரு திலகம் என்று ஆன பின்பு, அந்தத் திலகத்தின் வடிவம் எப்படிப்பட்டதாக இருக்கக்கூடும் என்கிற கேள்வி எழுகின்றதல்லவா?

இந்தக் கேள்விக்கும் நம்மாழ்வார் அற்புதமான ஒரு பதிலை அதே பதிகத்தில் அருள்கின்றார்.

*''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்*
*மங்கை உறைமார்பா!*
*நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்!*
*என்னை ஆள்வானே!*
*நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்*
*திருவேங்கடத்தானே!*
*புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ்*
*அமர்ந்து புகுந்தனே!''*

ஒரு நொடிப் பொழுதும் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன் என்று அந்த அலர் மேல் மங்கைத் தாயார் எம்பெருமானின் திருமார்பிலேயே நித்திய வாசம் செய்கின்றாள்.

அதாவது திருமண்காப்பும், அதற்கு நடுவில் எப்போதும் இணைபிரியாமல் இருந்து கொண்டு இருக்கும் ஸ்ரீசூர்ணமும் போல திருவேங்கடமுடையானும், அவனுடைய திருமார்பில் எழுந்தருளி இருக்கும் அலர்மேல் மங்கைத் தாயாரும் சேவை சாதிக்கின்ற திருமலையாகிய திருவேங்கடம் என்பது பூதேவித் தாயாரின் நெற்றியில் ஒரு திருமண் காப்பாகவே விளங்குகின்றது.

திருவேங்கடமலை மட்டுமின்றி அந்தத் திருவேங்கடமலையின் உச்சியில் எம்பெருமான் திருவேங்கடவன் எழுந்தருளியுள்ள அந்த அதியற்புதமான திருக்கோயிலும் கூட பூமாதேவியின் நெற்றித் திலகமாக, அதாவது திருமண் காப்பாக விளங்குகின்றது எனச் சொல்லலாம்.

இவ்வழியில், நம்மையெல்லாம் சுமந்து வாழ்விக்கின்ற நம் பூமாதேவியும் "எம்பெருமானின் அடியாள்" என்று தன்னை உணர்த்திக் கொள்வதற்காகவே திருவேங்கடம் என்னும் திருமண் காப்பாகிய திலகத்தைத் தன் நெற்றியில் அணிந்திருக்கின்றாள்.

ஓர் ஆணோ, பெண்ணோ எம்பெருமானின் அடியாராக விளங்கும் பொழுது அவருடைய அவயவங்களும் கூட எம்பெருமானுக்கு உரியவை தாமே.

அவ்விதத்தில், நம் பூமாதேவியின் மடியில் பிறந்து வளர்ந்து திரிந்து கொண்டிருக்கும் நாம் அனைவருமே எம்பெருமான் திருவேங்கடமுடையானின் உடமைகள் தாமே.

இதனை உணர்த்துவதன் பொருட்டுத்தான் நம் பூமாதேவி எம்பெருமான் திருவேங்கடவன் எழுந்தருளியிருக்கும் அற்புதமான அந்தத் திருவேங்கட மலையினை தனது நெற்றியில் திலகமாக, திருமண்காப்பாக அணிந்து கொண்டிருக்கின்றாள் என்கிறார் நம்மாழ்வார்.

ஆக, இவ்வுலகமும், இவ்வுலகின் மீது உலாவும் உயிர்களனைத்தும் எம்பெருமான் திருவேங்கடமுடையானின் தாசபூதர்கள், அடியார்கள் என்ற பேருண்மையைத் ***"திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே!"*** என்று ரத்தினச் சுருக்கமாக அருளியுள்ள நம்மாழ்வாரின் ஆழ்ந்த ஞானத்தினைக் கண்டு நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை என்பதே உண்மை.

இவ்விதமாக, திருவேங்கடமலையே திருமண் காப்பாக – திலகமாகப் படைத்தருளியதுடன் அந்தத் திருவேங்கடமலையின் மீது தன்னைவிட்டு அகலாத அலர்மேல் மங்கைக்குத் தனது திருமார்பில் இடமளித்து "தானே பரம்பொருள்" என்று கூறாமல் கூறியபடி எழுந்தருளியிருக்கும் அத்திருவேங்கட முடையானுக்கு பிரம்ம ருத்ராதி தேவர்கள் உகந்து எடுக்கும் திருவிழாவாகிய புரட்டாசி பிரம்மோத்ஸவத்தில் நாம் அனைவரும் பங்கு பெற்றுப் பேரானந்தம் அடைவோமா!

**– திரு.காயார் கோமடம் சேஷாத்ரி தாசன்,**
**காஞ்சிபுரம், 9486139685.**

## பாரம்பரியமான உடைகளை அணிவோம்! திருமலையின் புனிதத்தைக் காப்போம்!!

**இந்து சனாதன முறைபடி எந்த தெய்வ நிகழ்ச்சிகளிலும் நாம் பாரம்பரியமான உடைகளை அணிதல் வேண்டும். குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும்போது நாம் நம் பண்பாட்டின்படி பாரம்பரியமான ஆடைகளையே உடுத்திச் செல்லுதல் வேண்டும். அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை நம் இந்து கலாசாரத்தின்படி பாரம்பரியமான ஆடையகளையே அணிந்து வர வலியுறுத்துகின்றது.**



**ஆண்கள் வேஷ்டி, மேல்துண்டு, சட்டை, குர்தா, பைஜாமா போன்றவற்றை அணிதல் வேண்டும். பெண்கள் புடவை, இரவிக்கை, துப்பட்டாவுடன் கூடிய சுடிதார், சிறுமிகள் பாவாடை சட்டை போன்றவற்றையே அணிந்து வருதல் வேண்டும். முக்கியமாக ஆர்ஜித சேவை, சிறப்பு நுழைவு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கட்டாயம் இம்முறையினைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் குடும்ப வழக்கப்படி நெற்றியில் திலகமும் அணிந்து வருதல் வேண்டும்.**

முதலாழ்வார்கள் மூவர். வைணவம் தழைக்க வழி செய்தவர்கள். சமண பௌத்த செல்வாக்கால் சமய உலகம் இருண்டிருந்த கால கட்டத்திலே தோன்றி அருளிச்செயல் என்று சொல்லப்படுகின்ற நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் முதல் மூன்று திருவந்தாதிகளை முறையே அருளிச் செய்தவர்கள்.

இவர்கள் யோகிகள். முதல் ஆழ்வார்கள் மூவரையும் இணைத்துச் சொல்வதுதான் வைணவ மரபு. முதல் ஆழ்வார்கள் வைணவப் பயிருக்கு முதல் போட்டவர்கள். அதில் உள்ள சுளைகளை எடுத்தவர் இவர்களுக்கு பின்னே வந்த திருமழிசை ஆழ்வார்.

முதல் ஆழ்வார்கள் மூவரில் முதல் ஆழ்வாரான பொய்கை ஆழ்வார் ஐப்பசி திருவோண நன்னாளில் அவதரித்து முதல் திருவந்தாதியை அருளிச் செய்தார். முதல் பாசுரமான *''வையம் தகளியா வார்கடலே நெய்யாக''* என்று தொடங்கி 100 பாசுரங்களை அருளியிருக்கிறார்.

முதல் திருவந்தாதியை நிறைவு செய்யும் தருணத்தில் 99 ஆவது பாசுரத்தில் அவருக்கு நினைவுக்கு வந்தது திருமலை அப்பன் புகழ் என்பது விசேஷம்.

**உளன்கண்டாய் நன்னெஞ்சே, உத்தமன் என்றும்**
**உளன்கண்டாய், உள்ளுவா ருள்ளத்து உளன்கண்டாய்,**
**வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்,**
**உள்ளத்தி னுள்ளானென் றோர்.**

முதலில் பதவுரை அனுபவிப்போம். நல்நெஞ்சே – நான் சொல்வதை கேட்கும் மனமே!, உத்தமன் – புருஷோத்தமனான எம்பெருமான், உளன் கண்டாய் – நம்மைக் காப்பாற்றுவதில் ஆசை உள்ளவனாக இருப்பதைப் பார். என்றும் உளன் கண்டாய் – எக்காலத்திலும் (நம்மைக் காப்பதிலேயே உறுதி கொண்டு இருக்கிறான் காண்), உள்ளுவார் உள்ளத்து – தன்னை நினைக்கும் பக்தர்கள் மனத்திலே, உளன்கண்டாய் – அகலாமல் என்றும் இருக்கிறான் பார். அவன் யார் தெரியுமா? வெள்ளத்தின் உள்ளானும் – திருப்பாற்கடலில் கண் வளர்ந் தருள்பவனும், வேங்கடத்து மேயானும் – திருமலையிலே நிற்பவனும், உள்ளத்தின் உள்ளான் என்று – இப்போது நம்முடைய இதயத்திலே வந்து புகுந்து நித்ய வாஸம் பண்ணுகிறானென்று, ஓர் – தெரிந்துகொள்.



# திருமலை வாசமும் பிரம்மோத்ஸவமும் எதற்கு?

எம்பெருமான் ஐந்து நிலைகளிலே இருக்கின்றான். ஒன்று பரம். வைகுண்டபதியாக நித்திய விபூதியில் எழுந்தருளி இருக்கக்கூடிய நிலை. இரண்டு வியூகம் என்னும் பாற்கடலில் துயில் கொள்ளும் நிலை. மூன்றாவதாக அவன் எடுத்த அவதாரங்கள். இதற்கு விபவம் என்று சொல்வார்கள். இதற்கு அடுத்த நிலை திருக்கோயில்களிலே பின்னானார் வணங்கும் ஜோதியாக எழுந்தருளி பிரகாசிக்கக் கூடிய நிலை. இதனை அர்ச்சை என்று சொல்வார்கள். ஐந்தாவதாக ஒவ்வொருவர் மனதிலும் உள்ளுறையும் நிலை. இந்த நிலைக்கு அந்தர்யாமித்துவம் என்று பெயர்.

வைணவத்தில் சித், அசித், ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்கள் உண்டு. எல்லா உயிர்களிலும் மறைந்து வாழ்கின்ற ஈஸ்வர விபூதி நிலை. அதைத்தான் அந்தர்யாமித்துவம் என்று சொல்வார்கள் இதை அறிந்தவர்கள் ஞானிகள்.

சுவாமி நம்மாழ்வார் *"உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியில் இவை உண்ட சுரனே"* என்று இந்த நிலையை மிக அற்புதமாக விவரிக்கிறார். அந்தர்யாமித்துவமாக உறைகின்ற எம்பெருமானை உணர்வதுதான் ஞானம். இந்த உணர்வைத்தான் 99ஆம் பாசுரத்தில் விளக்க அவர் பயன்படுத்திய முக்கியமான சொல் "உளன்".

உளன் என்றால் எங்கும் உளன் என்பது ஒரு பொருள். என்றும் உளன் என்பது ஒரு பொருள். இந்தப் பாசுரத்தில் 4 முறை உளன் என்று திரும்பத் திரும்பச் சொல்லுகின்ற நயத்தைக் கவனிக்க வேண்டும்.

அவன் யார் என்பதை அழுத்தமாகச் சொல்லுகின்ற பொழுது வெள்ளத்தில் உள்ளான் என்று சொல்லி, வேங்கடத்து மேயான் என்று திருமலையைச் சொல்லுகின்றார். அவன் தான் இவன் என்பதை தான் உணர்ந்து கொண்டு, அவன் வேறு எங்கும் இல்லை. தன்னுடைய உள்ளத்திலே இருக்கின்றான். அவன் தான் உத்தமன் (புருஷோத்தமன்) என்று தன்னுடைய நெஞ்சுக்கு சொல்லுகின்றார். "நெஞ்சே! உள்ளே இருக்கிறவனைப் பற்றித் தெரியாமலேயே இருக்கிறாயே அவன் யார் தெரியுமா? திருமலை அப்பன். எங்கிருந்து வந்தான் தெரியுமா? பாற்கடலில் இருந்து வந்தான். எதற்காக வந்தான் தெரியுமா? உள்ளத்திலே ஒரு இடம் தேடி வந்திருக்கின்றான். இதை வைணவத்தில் சேதன லாபம் ஈஸ்வரனுக்கு என்று மிக அழகாகச் சொல்லுவார்கள்.

*"வாஸுதேவம் சர்வம் இதி ச மகாத்மா ஸுதுர் லப:"* என்று கீதையில் பகவான் சொல்லுகின்றார்.

திருமலை அப்பன் பிரம்மோத்ஸவத்திலும், மற்ற உத்ஸ வங்களிலும் உபய நாச்சிமார்களோடு மிக அற்புதமாகப் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து சேவை தருகின்றான்.






## நவராத்திரியில் நவதுர்கா

**நவராத்திரிகள் நான்கு வகை. அதில் தேவி நவராத்திரி, சரண் நவராத்திரி என்று அழைக்கப்படும் மஹாளய அமாவாசைக்கு அடுத்த பிரதமையில் இருந்து தசமி வரை நவராத்திரி விழா அனைவராலும் கொண்டாடப்படுகிறது. இந்த ஒன்பது நாட்களில் லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி எனும் முப்பெரும் தேவியரைப் பூஜிப்பர்.**

**நவதுர்கா தியான சுலோகம்**

**பிரதமம் சைல புத்ரிச்ச த்விதியம்**
**பிரம்மசாரினிம் திருதியம்**
**சந்திரகண்டாச்ச கூஷ்மாண்டா**
**சதுர்த்தமம் பஞ்சமம்**
**ஸ்கந்தமாத்ரேணி ஷஷ்டமம்**
**காத்யாயனீம் சப்தமம்**
**காலராற்றிச்ச அஷ்டமம் கௌரிநிம்**
**நவமம் சித்திதாத்ரீச**
**நவதுர்கா பிரதிடதம்.**

அவனைப் பார்ப்பதற்காக நம்மைப் போன்ற சேதனர்கள் ஆயிரக்கணக்கில் கூடுகின்றோம். நாம் அவனைப் பார்க் கின்றோம். அது பெரிதல்ல; ஒருவனைப் பிடிக்க ஊரை வளைக்குமாபோலே தனக்கு உரிய ஒரு சேதனனைப் பார்க்கின்றான் என்பதுதான் முக்கியம்.

ஆனால் நாம் என்ன செய்கின்றோம்? கண்ணை விழித்து வைத்து அவனுடைய திருவீதி உலாக் காட்சியைக் காணும் பாக்கியம் பெற்ற நாம் அவன் நம்முடைய மனதில் நுழைவதற்காக மனக்கதவைத் தட்டுகிறானே என்று எண்ணாமல் அதை இறுக மூடி விடுகின்றோம். யாருடைய மனம் திறந்து இருக்கிறதோ அந்த மனதில் போய் அவன் அமர்ந்து கொள்கின்றான். இதைத்தான் மிக அற்புதமாக உணர்ந்து முதல் ஆழ்வார் உள்ளத்தில் உள்ளான் என்று தெரிந்து கொள் என்கிறார். “ஓர்” என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். ஓர் என்பது மிக அற்புதமான சொல். ஆராய்; தெளி: தெரிந்தெடு; நினை; கவனித்துக் கேள் என்று பொருள்.

மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் பல இடங்களிலே இந்தச் சொல்லைப் பயன்படுத்துகின்றார். நெஞ்சுக்கு மிக அழுத்தமாக உறுதியாகச் சொல்லுகின்ற சொல் ஓர். நாம் இறையருளைப் பெற வேண்டும் என்று மலையேறித் திருமலை அப்பனை தரிசிக்கச் செல்லுகிறோம். ஆனால் நம்மைப் பெற நம்மை விட அதிக முயற்சியை பெருமான் எடுத்திருக்கிறான். நம்முடைய இருதயத்திலே புகுந்து நித்திய வாசம் செய்வதற்காக பாற்கடலை விட்டு விட்டு திருமலையில் இறங்கி நிற்கிறான்.

அவன் நித்யம் என்று இருப்பது வைகுண்டத்தை அல்ல; பாற்கடலை அல்ல; திருமலையை அல்ல; ஒரு சேதனனுடைய இதயத்தைத் தான் நித்திய வாசம் கொள்வதற்கான சிறந்த இடமாக நினைக்கிறான் என்பது தான் இந்தப் பாடலின் சாரமான கருத்து.

அப்படிச் செய்யும் முயற்சிகளில் ஒன்று தான் திருக்கோயில்களிலே அர்ச்சாவதாரமாக எழுந்தருளி இருக்கக்கூடிய நிலை. மற்றும் அங்கே நடைபெறுகின்ற உற்சவங்கள் என்று நாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால் திருமலை வாசமும் பிரமோத்ஸவ வைபவங்களும் சேதனின் ஹிருதய வாசம் பெறுவதற்காக என்று அவன் நினைத்துக் கொண்டு இருக்கிறான். அதற்காகத்தான் பாற்கடலை விட்டு திருமலைக்கு வந்திருக்கிறான்.

**– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963.**




**28-11-2024 முதல் 06-12-2024 வரை**

**28-11-2024 வியாழக்கிழமை**
காலை : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**29-11-2024 வெள்ளிக்கிழமை**
காலை : பெரிய சேஷவாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**30-11-2024 சனிக்கிழமை**
காலை : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**01-12-2024 ஞாயிற்றுக்கிழமை**
காலை : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத் வாகனம்

**02-12-2024 திங்கட்கிழமை**
காலை : பல்லக்கு உத்ஸவம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**03-12-2024 செவ்வாய்க்கிழமை**
காலை : சர்வபூபால வாகனம்
மாலை : தங்கத்திருத்தேர்
இரவு : கருட சேவை

**04-12-2024 புதன் கிழமை**
காலை : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**05-12-2024 வியாழக்கிழமை**
காலை : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**06-12-2024 வெள்ளிக்கிழமை**
காலை : சக்கரஸ்நானம், பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் கடந்து இந்தக் கலியுகத்தில் காக்கும் கடவுளாக திருமலையில் நின்ற திருக்கோலத்தில் தன்னை நாடி வருபவர்களுக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் தாம் இருக்கும் இடத்திலிருந்து தன்னை நினைப்பவர் களையும் காத்தருளுகின்றார். கன்னட ஹரி தாசர்கள் அனாதரக்ஷகனான, ஆபத்பாந்தவனான திருவேங்கடமுடையானைப் புகழ்ந்து பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளனர்.

இக்கீர்த்தனைகள் பாமர மக்களுக்கும் புரியும் வகையில் கஸ்தூரியைப் போன்று மணக்கும் கன்னட மொழியில் எளிமையாக தமது கீர்த்தனை எனும் எழுத்து மலர்களால் ஸ்ரீஹரியின் திருப்பாதங் களில் அபிஷேகம் செய்தனர். அவர்களுள் ஸ்ரீபாத ராஜர், ஸ்ரீவியாச ராஜர், ஸ்ரீவாதி ராஜர், ஸ்ரீபிரசன்ன வேங்கடதாசர், ஸ்ரீபுரந்தரதாசர், ஸ்ரீகனக தாசர், ஸ்ரீவிஜய தாசர், ஸ்ரீகோபால தாசர், ஸ்ரீஜெகன்நாத தாசர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஸ்ரீபிரசன்னவேங்கட தாசர்,

*“பிடினோ நின்னங்கிரி ஸ்ரீநிவாசா*
*என்ன துடிசி கொள்ளலோ ஸ்ரீநிவாசா*
*நின்ன நொடியே ஜிதல்லோ ஸ்ரீநிவாசா*
*நன்ன நடதப்பு காயோ ஸ்ரீநிவாசா...”* என்கிற பாடல் வாயிலாக எந்நேரத்திலும் தன்னைக் காப் பாற்றி, வழி தவறவிடாமல் தன்னுடன் எப்பொழு தும் வந்து வழி நடத்திட வேண்டும் என ஒவ்வொரு பாடல் வரிகளிலும் “ஸ்ரீநிவாசா” என்று நிறைவடை யும் விதமாகப் பாடலை இயற்றியுள்ளார்.

புரந்தர தாசர் திருவேங்கடமுடையானான திம்மப்பனை,

*வேங்கடாசல நிலையம் வைகுண்ட புரவாசம்*
*பங்கஜ நேத்ரம் பரம பவித்ரம்*
*சங்க சக்ரதரம் சின்மய ரூபம்...*

எனத் திருமலையை வைகுண்டமாகவும், திருவேங்கடவனின் திருக்கண்கள் தாமரை மலராகவும் போற்றி திருஅவயவ அழகினையும், ஆபரணங்களையும் பலவாறு புகழ்ந்துப் பாடியுள்ளார். மற்றுமொரு பாடலில்,

*“நின்னந்த தந்தே எனகுண்டு நினகில்லா*
*நின்னந்த ஸ்வாமி எனகுண்டு நினகில்லா*
*நின்னந்த துரை எனகுண்டு நினகில்லா*
*நினே பரதேசி நானே ஸ்வதேசி...”*

எனத் திருவேங்கடமுடையானை தனது தந்தையாகவும், துரையாகவும், ஸ்வாமியாகவும்



# வேங்கடாசல நிலையம்...

எண்ணித் தனக்கு அனைத்தும் அந்த வேங்கடவனே எனத் துதிக்கின்றார். தாஸர்கள் திருவேங்கடவனின் பிரம்மோத்ஸவத்தின் அழகையும், வாகனத்தில் தேவாதிதேவனான திருமலையப்பன் வலம் வரும் அழகினையும் வருணித்த விதம் போற்றுதற்குரியது.

*''இந்து துவஜாரோஹணவெந்து திளிது வனஜ...''* எனத் தொடங்கும் கீர்த்தனையில் ஸ்ரீஹரி ஒருவரே முதன்மையானவர் எனவும், அவருக்காக பிரம்மா நிகழ்த்தும் பிரம்மோத்ஸவத்திற்கு வனஜா, நந்தனன், இந்து சேகரன், சனகசநந்தனர், நாரதர், தும்புரு, கந்தர்வர் மற்றும் சர்வ தேவர்களையும் வரவேற்கும் விதமாக ஸ்ரீவிஜயதாசர் பாடித் துதித்துள்ளார்.

பாம்பணை மேல் படுத்துறங்கும் பத்மநாபனான திருவேங்கடவன் இந்தக் கலியுக வைகுந்த பிரம்மோத்ஸவத்தில் முதலில் சேஷ வாகனத்தின் மீதேறி திருவீதி உலா வருவதை *''பந்து நிந்திக நோடி பூதளதி வேங்கட...''* எனும் கீர்த்தனையின் வாயிலாக ஸ்ரீபுரந்தரதாசர் திருவேங்கடவனின் திருவாபரணங்களையும், பூஜைகளையும் *''...பதுமநாபனு புரந்தர விடலணு பிரதிவருஷ பிரம்மோத்ஸவதி மெரியுத''* எனப் பாடித் துதித்துள்ளார். மக்களின் சங்கீத நாத ஒலிகளின் நடுவே, சத்ர சாமரம் வீசிக் கொண்டு வரும் அழகினை *''சேஷ வாகனனாதி பந்த ஸ்ரீநிவாசா வாசுதேவ வாசவ ப்ரியா...''* என விஜய தாசர் விவரிக்கின்றார்.

பாலும், நீரும் கலந்திருந்தாலும் அதைப் பிரிக்கும் கலையை அறிந்த ஹம்சத்தின் மேல் திருவேங்கடவன் கலை மகளைப் போன்று வெண்ணிற ஆடை உடுத்தி, தன் திருக்கரங்களில் வீணை ஏந்தி உலாவரும் அழகை *''ஹம்ச வாகன க்ரதுத்வம்ஸி சுமனசோத்தம்ஸ...''* எனும் கீர்த்தனையைப் பாடி, ஸ்வாமியின் பத்து அவதாரங்களும் ஹரியே என விஜய தாசர் புகழ்கின்றார்.

வனத்திற்கு அரசன் சிம்மம். *''சிங்கன ஏரித நரசிங்க தோமரவ பிடிது அங்க ரங்க வைபோகதிந்த*




திருமலையில் நடைபெறும் பிரம்மோத்ஸவத்தின் சிகரமாகத் திகழும் கருட வாகன சேவையை *''கோதா சமர்ப்பித... கருடோபரி சந்நிவிஷ்டஹ:...''* என்று கன்னட ஹரி தாஸர் பாடிப் போற்றியுள்ளார்.

அந்த கருட சேவை பல சிறப்புகள் நிறைந்தது. அன்று மூலவருக்கு அணிவிக்கப்படும் மகர கண்டி, சஹஸ்ர நாம ஹாரம், லக்ஷ்மி ஹாரம் போன்ற அணிகலன்களை திருமலையப்ப ஸ்வாமிக்கும் அணிவிப்பர்.

ஸ்ரீ வி ல் லி பு த் தூ ரி லி ரு ந் து ஆண்டாள் சூடிக்கொடுத்த மலர் மாலையையும் திருமலையப்ப ஸ்வாமிக்குச் சாற்றுவர்.

அன்றைய தினம் கருடாழ்வார் தாங்கி வரும் ஸ்வாமியின் திருப்பாதங்களை காலையில் யானை மீது வைத்துக் கொண்டு திருமாடவீதிகளில் திருவுலா வாகக் கொண்டு வருவர்.

சென்னையிலிருந்து நடைபயணமாக ஆங்காங்கே பூஜைகளை ஏற்று திருமலைக்குக் கொண்டு வரப்படும் திருக்குடைகளைப் பயன்படுத்துவர்.

இவையெல்லாம் ஏற்றுக்கொண்ட திருமலையப்ப ஸ்வாமி தன் பக்தர்களுக்கு தரிசனம் அளித்திட திருமாட வீதிகளில் கருடன் மீது எழுந்தருளுகிறார்.







# நாராயணகிரியும்... சிலாதோரணமும்...



திருவேங்கடமுடையான் ஆகாய மார்கமாக திருமலையில் முதன் முதலில் தன் திருப்பாதங்கள் பதித்த இடம் நாராயணகிரியாகும். திருவேங்கடவனின் திருப்பாதங்களை காலை முதல் மாலை வரையில் சென்று நாம் தரிசிக்கலாம். இத்திருப்பாதம் திருமலை ஆலயத்திற்கு பின்புறம் உள்ள மலையில் சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

தனது இரண்டாவது திருவடியை திருமலையில் சிலாதோரணம் என்றழைக்கப்படும் அரிய புவியியல் வளைவில் வைத்ததால் இது திருவேங்கடமுடையானால் தோற்று விக்கப்பட்ட வளைவாகவே பக்தர்கள் நம்புகிறார்கள். பின்னர், ஸ்வாமி இங்கிருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள திருமலை ஆலயத்தில் ஆனந்த நிலையத்தில் அர்ச்சாமூர்த்தியாக நின்று நமக்கு இன்றும் அருள் புரிந்து கொண்டிருப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இவ்வரிய நிகழ்ச்சிக்கு அடையாளமாக சுமார் 250 கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்பட்ட இப்புவியியல் வளைவு இன்றும் நமக்கு பொக்கிஷமாக விளங்குகிறது என பக்தர்கள் நம்புகிறார்கள்.



*நலிது சதுரங்க பீதியொளு மெரத..''* எனும் கீர்த்தனையில் ஸ்ரீவிஜயதாசர் சனகசனந்த முனிவர்கள் வேதங்களை ஓதிக்கொண்டும், கந்தர்வர்கள் பாடல்களைப் பாடிக்கொண்டும், தும்புரு ஆடிப்பாடியும், ரம்பை, ஊர்வசி போன்றோர் நளினமாக ஆடிக்கொண்டும் வருவதாக எண்ணி அலர்மேல் மங்கை மணாளனான திருவேங்கடவனைப் பாடி மகிழ்கின்றார்.

முத்துக்கள் அலங்கரித்த பந்தலில் முத்தங்கியில் ஸ்ரீதேவி பூதேவியுடன் வலம் வரும் திருமலை அப்பனை *''த்வஜத திம்மப்பா பல்லக்கி ஏறி தன்னய நிஜகிரி யாத்ரே கைதித ஹருஷவ கேளி''* எனத் தொடங்கும் கீர்த்தனையில் "அனைத்து தேவாதி தேவர்களும் உலக நாயகன் அதாவது உலகத்தைக் காப்பவன் நீயே" எனப் போற்றுவதாக ஸ்ரீபுரந்தரதாசர் போற்றுகின்றார்.

இந்த முத்துப் பந்தல் வாகனத்தைப் பற்றி கோபால தாசரும், *''பாரய்யா பா பா பஹுதர ப்ரிய ஸ்ரீநிவாச ராயா மாரஜனக முக்தரொடைய தேவைய்ய ஜீய''* எனத் தொடங்கும் கீர்த்தனையில் *''சுந்தர விக்ரஹ குப்பாங்க விஹங்க துரங்க...''* எனத் திருமலையப்பனின் சுந்தரமான அழகை வருணித்து துதிக்கின்றார்.

*''இந்த ஹெண்ணனு நாயெல்லி காணேனு ஹோந்தகாரி காணிரோ...''* எனத் தொடங்கும் கீர்த்தனையில் ஸ்ரீபுரந்தரதாசர் மேருமலையை மத்தாக வைத்து பாற்கடலைக் கடைந்து அசுரர்களை தனது பார்வையால் மயக்கி தேவர்களுக்கு மட்டும் அமிர்தம் வழங்கியதை வர்ணித்து பாடுகின்றார்.

*''நோடு நோடு கருட கமணனே மாடு தயவனு வேகதி பாடுவே ஆனந்ததலி கொண்டாடுவெனு நின்ன மூர்த்திய...''* எனத் தொடங்கும் கீர்த்தனையில் ஸ்ரீவிஜயதாசர், கருடன் தாங்கி வரும் திருப்பாதங்களைத் தரிசித்து அந்தத் திருவேங்கடவனின் திருப்பாதங்களைச் சரணடைந்தால் நமக்குத் தேவையான அனைத்தையும் அவனே வழங்கிடுவான் என்று பாடி சரணாகதித் தத்துவத்தை விளக்குகின்றார்.

தாசர்கள் தம் கீர்த்தனைகளால் திருவேங்கடவனை சரண் அடைந்தது போன்று நாமும் அனுதினமும் அப்பரந்தாமனின் திருநாமம் கூறி அவன் திருப்பாதங்களில் சரண் அடைவோம்.

**– திருமதி வைஷ்ணவி சேஷகிரி,**
**திருப்பதி**

# வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு

திரு. கிடாம்பி நாராயணன்,
சென்னை, 9444918374

***நெறியார் குழற்கற்றை முன்னின்று பின் தாழ்ந்து
அறியா திளங்கிரியென் றெண்ணி - பிரியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனல் குன்றென்னும்
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு***

திருமகள் கேள்வன் ஸ்ரீமந்நாராயணன். அந்த எம்பெருமானாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் எம்பெருமானுடைய நித்யமான கல்யாண குணங்களிலே மிகவும் ஈடுபட்டவர்கள். தங்களையும் மறந்து, எம்பெருமானையே அநுபவித்தவர்கள். அந்த அநுபவத்தையே அழகான இனிமையான தமிழ் மொழியில் பாசுரமாய்ப் பாடினவர்கள் ஆவர்.

இந்த ஆழ்வார்கள் அனைவருக்கும் முன்பு அவதாரம் பண்ணிய மூன்று ஆழ்வார்கள் "முதல் ஆழ்வார்கள்" என்று நாம் கொண்டாடுகிறோம். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்று அவர்கள் மூன்று பேர்க்கும் பெயர் அமைந்தது.

எம்பெருமானை மூன்று நிலைகளிலே ஆழ்வார்கள் அநுபவித்தார்கள். பரபக்தி, பரஜ்நானம், பரமபக்தி என்று அந்த நிலைகளுக்கு பெயர் உண்டானது. எம்பெருமானை கண்ணால் கண்டு அநுபவிக்க வேண்டும் என்ற ஆசைக்கு "பரபக்தி" என்று பெயர். அகக் கண்ணால் கண்டு அநுபவிக்கும் நிலைக்குப் பெயர் "பரஜ்ஞானம்" என்று பெயர். அந்த அநுபவம் இடைவிடாது கிடைக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாகும். அந்த ஆவலிற்கு "பரமபக்தி" என்று பெயர்.

முதல் ஆழ்வார்கள் மூன்று பேரில் இரண்டாவதான பூதத்தாழ்வாருக்கு, பரஜ்ஞானமே வடிவமாய் அமைந்தது. பூதத்தாழ்வார் அருளிச் செய்த பிரபந்தம் இரண்டாம் திருவந்தாதி ஆகும். அந்த பிரபந்தத்தின் 53வது பாசுரத்தையே நாம் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் கண்டோம்.

எல்லோருக்கும் அருள் புரியும் எம்பெருமான் எல்லோரும் தன்னை வந்து தினமும் வணங்கும் படியாக திருமலையில் நித்யவாஸம் செய்கிறான். நாம் மிகவும் ஆசைப்பட்டு விரும்பும் மலை திருமலை என்று பூதத்தாழ்வார் இந்தப் பாசுரத்தில் அருளிச் செய்கிறார். இந்தப் பாசுரத்தை மிகவும் அநுபவித்து ரசித்து ஆழ்வார் பாடியுள்ளார். இந்தப் பாசுரத்தின் விரிவான அர்தத்தை இனி நாமும் கண்டு களிப்போம்.

அடியார்கள் அடிமை கொள்வதற்கு ஏற்றதான மலை திருமலை. எம்பெருமானே மிகவும் விரும்பிய மலை திருமலை. ***"வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா! நாயேன் வந்து அடைந்தேன்"*** என்று திருமங்கையாழ்வார் மிகவும் ஆசைப்பட்ட மலை திருமலை. ***"அடியேன் மேவி அமர்கின்ற அமுதே"*** என்று குருகூர் சடகோபன் என்று கொண்டாடப்படும் நம்மாழ்வார் மிகவும் அபிமானித்த திருவேங்கடவன் நித்ய வாஸம் செய்யும் மலை திருமலை. ***"கோனேறி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"*** என்றும், ***"மீனாய்ப்***



பிறக்கும் விதியுடையேன் ஆவேனே'' என்றும், ''செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே!'' என்றும், ''தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே'' என்றும், ''கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே'' என்றும் குலசேகராழ்வார் மிகவும் அபிமானித்த மலை திருமலை.

அந்தத் திருமலையில் சேவை சாதிக்கும் திருமலையப்பனைக் கண்ணாரக் கண்டு தொழ வேண்டும் என்று அடியார்கள் யாத்திரையாக வருகிறார்கள். மலைக்கு மேலே சென்று வசிப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. அதைக் காட்டிலும் மலைக்குச் செல்லும் காட்டுப் பாதையிலே மிகவும் ஆசைப்பட்டு தங்கினார்கள். அங்கேயே கிடந்து, எம்பெருமானை மனதில் நினைத்து, தவம் செய்தார்கள். தங்களை மறந்தார்கள். அவர்கள் இருக்கும் இடத்தை மறந்தார்கள். மூச்சை அடக்கி னார்கள். உடம்பை சிறிதும் கூட அசைக்காமல் தவம் செய்தார்கள். இராமாயணம் பாடிய வால்மீகி முனிவர் போல் ஆனார்கள். அவர்கள் தலைமுடி அடர்த்தியாக வளர்ந்தது. முன் தலையிலிருந்து கீழே படும் படியாக முடிக்கற்றை நீண்டு கிடந்தது. மலைக்குச் செல்லும் பாதையில் அழகானப் பூக்கள் அள்ளிக்கொடுக்கும் பூங்கொடிகள் பல இருந்தன. அந்தக் கொடிகள், தவம் செய்யும் அடியார்கள் என்று அறியவில்லை. அடியார்களின் முடிக்கற்றைகள் நீண்டு வளர்ந்தவை என்றும் அறியவில்லை. தவம் செய்யும் அடியார்களின் கூந்தலை, சிறிய மலைகள் என்று பூங்கொடிகள் நினைத்தது. அதன் மேலே நன்றாக படர்ந்து வளர்ந்தது.

வான்மீகி முனிவர் மீது புற்று மூடினாற்போலே, தவம் செய்யும் அடியார்கள் மீது பூங்கொடிகள் மூடியது. அதைப்பார்க்கும் பொழுது, திருமலை செல்லும் பாதையில் பூக்கள் நிறைந்த கொடிகள் எங்கும் நிரம்பி, பாதையை மறைத்து விட்டது. அதைப் பார்ப்பவர்கள், இப்படி ஒரு காட்சியா? இப்படி ஓர் பூங்கொடியா? இப்படியும் பூக்கள் மலர்ந்து இருக்குமா? என்று வியந்தார்கள். திருமலைக்குச் செல்லும் பாதையா அல்லது திருவேங்கடவனின் நந்தவனமா என்று ஆச்சரியப்பட்டார்கள்.

இந்தக் கொடிகளைப் பார்க்க வேண்டும் என்று திருமலையில் உள்ள அருவிகளுக்கும் ஆசை உண் டானது. அலைகளாகிற தங்கள் கைகளால் ஆர வாரம் செய்து கொண்டு, மிகவும் வேகமாய் அந்த அருவிகளும் திருமலை உச்சியிலே இருந்து கீழே இறங்கி வந்தது. திருமலையைப் பசுமையாக்கின.

**மரம், செடி, கொடிகளுடன் அருவிகள் எங்கும் பரவி, அரிய வகை உயிரினங்களும் இந்த இயற்கை வளத்தையே தம் இருப்பிடமாகக் கொண்டிருக்கும் இத்திருமலையில், எம்பெருமான் திருவேங்கடத்தான் நின்று அருள் புரிகிறான். அந்தத் திருமலையே நான் மிகவும் விரும்பும் மலை என்று பூதத்தாழ்வார், தம் பாசுரத்தில் அருளிச் செய்கிறார். ஆழ்வாரைப் போலவே, நாமும் திருமலையை விரும்பு வோம். அடியார்கள் தவம் செய்தாற்போல் நாமும் செய்வோம்; திருமலையப்பன் திரு அருளைப் பெறுவோம்.**

**ஆழ்வார்கள் உகந்து அனுபவித்த இந்தத் திருமலையின் இயற்கை அழகினை நாமும் அனுபவித்து, அதனைக் காத்திட்டு, நம் வருங் கால சந்ததியினருக்கு அளித்திடுவோம். இயற்கைப் பாதுகாப்பே நமது பாதுகாப்பு என்பதை உணர்வோம்.**




# மன்னனின் மகிழ்ச்சியில் மலையப்பன்



– திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி, செய்யார், 97892 59696

தொண்டைமான் சக்ரவர்த்தி என்கிற மன்னனின் ஆட்சிக் காலத்தில், வயதான அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மரணிக்கும் தருவாயில் காசியில் இருக்க ஆசைப்பட்டார்.



வயதாகி விட்டபடியால் காசி வரை போகுமளவிற்கு உடலில் பலம் இல்லை. எனவே தன் மகனிடம் தான் இறந்த பிறகு தனது அஸ்தியை கங்கையில் கரைக்குமாறு கேட்டுக் கொண்டார். சிறிது காலத்தில் அவரும் இறந்து விட்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற எண்ணினான் தனயன். கங்கை சென்று வர நீண்ட நாட்களாகும். நெருக்கமான உறவுகள் எவரும் இல்லாமையால், தொண்டைமான் சக்ரவர்த்தியிடம் சென்று, எனது தந்தையின் அஸ்தியைக் கங்கையில் கரைக்கச் செல்கிறேன். நான் திரும்பி வரும்வரை எனது மனைவியையும், மகனையும் உங்களது பொறுப்பில் விட்டுச் செல்கிறேன் எனத் தெரிவித்தான். மன்னனும் பாதுகாப்பதாக உறுதி அளித்தான். பின் அவ்விருவரையும் அழைத்துச் சென்று ஒரு வீட்டில் தங்க வைத்து விட்டு உங்களுக்குத் தேவையான அனைத்தும் எனது பணியாளர்கள் மூலம் அனுப்பி வைக்கிறேன் எனத் தெரிவித்தார்.

கங்கையில் அஸ்தியைக் கரைத்து விட்டு, திரும்ப வந்த அந்தணன், மன்னனிடம் தனது மனைவியையும் மகனையும் தன்னுடன் அனுப்பி வையுங்கள் என்றான். மன்னன் அதிர்ந்து போனான். அந்தணனைப் பார்த்தபின்தான் அவனின் மனைவி மற்றும் மகனின் நினைவு வந்தது. பல அலுவல்களால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளை மறந்தான். அச்சத்தில் ஆழ்ந்தான் மன்னன். **''நின்ற மாமருது இற்றுவீழ நடந்த நின்மலன் நேமியான், என்றும் வானவர் கைதொழும் இணைத் தாமரையடி எம்பிரான், கன்றிமாரி பொழிந்திட கடிதாநிரைக்கு இடர் நீக்குவான், சென்று குன்றமெடுத்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே''** என திருமங்கையாழ்வார் அனுபவித்தபடி அன்று மருத மரமாக நின்றிருந்த தேவர்களின் சாபத்தைப் போக்கியவனும், தினமும் வானவர்கள் இறங்கி வந்து மலையப்பனின் கமல மலரடிகளைத் தொழப்படுபவனும், குன்றெடுத்து ஆநிரைகளையும் கோபர்களையும் காத்தவனுமான கண்ணன்தான் இன்று திருமலையில் வரும் பக்தர்களின் துயர் துடைப்பதாக சங்கல்பம் மேற்கொண்டுள்ள மலையப்பன், நம்மையும் கைவிடாமல் காப்பாற்றுவான் என்கின்ற ஆழ்ந்த




நம்பிக்கையுடன் தங்களின் மகனும் மனைவியும் திருமலைக்குச் சென்று உள்ளனர். நாளை வருவார்கள், அதுவரை தாங்கள் அரண்மனையில் தங்கி ஓய்வெடுங்கள் என்றான்.

உடனடியாக அந்தணரின் மனைவி மற்றும் மகனைக் காண விரைந்து சென்ற அரசன், அவ்விடத்தில் கண்ட காட்சியினால் அதிர்ச்சியில் உறைந்தான். ஏனெனில் அவர்கள் அரசனிடமிருந்து உதவிகளை எதிர்பார்த்து பல நாள் காத்திருந்து ஏதும் கிடைக்காமையால், பசி தாளாமல் இறந்து எலும்புக் கூடாகக் கிடந்தனர்.

தொண்டைமான் சக்ரவர்த்தியின் நிர்மல பக்தியை உலகோர் அறியும் வண்ணம் பெருமாள் திருவாய் மலர்ந்து, அந்தணனின் மனைவியும் மகனும் என்னைக் காண வந்தார்கள் என்றுதானே கூறியுள்ளாய், கவலைப்படாதே. இதோ இந்தத் தீர்த்தத்தை அவர்கள் மீது தெளித்தால் உயிர் பெற்று எழுந்திருப்பார்கள் எனத் தெரிவித்தார். தீர்த்தத்தைப் பெற்றுக் கொண்ட மன்னன், மிகுந்த ஆவலுடன் வந்து இறந்து கிடந்தவர்களின்மீது தெளித்தான். அவ்விருவரும் தூக்கத்திலிருந்து விழிப்பதுபோல் எழுந்தனர். அவ்விருவரையும் அழைத்து வந்து அந்தணரிடம் ஒப்படைத்து நடந்த விபரங்களைத் தெரிவித்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார்.

ஆனால், அந்தணரோ தாங்கள் ஏன் மன்னிப்பு கோருகிறீர்கள்? இதற்குமுன் இவர்கள் எனக்கு கர்தாதீனமாக கிடைத்தனர், ஆனால் தற்போது இவர்கள் எனக்கு மலையப்பனின் பிரசாதமாக அல்லவா கிடைக்கப் பெற்றேன் என்றார். மன்னனும் பெருமாளின் நிர்ஹேதுக க்ருபையை எண்ணி மகிழ்ச்சியுடன் அவர்களை வழியனுப்பி வைத்தான்.

திருமலையப்பனின் திருவருளை விளக்கும் விதமாக திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம் என்னும் நூலில் “பிணம் எழுப்பி விட்டேனோ தொண்டைமானைப் போலே” என 5வது வார்த்தையாக இந்நிகழ்வினை கற்றறியலாம்.

## ஸப்தகிரி ஆகஸ்ட் 2024 விடைகள்

1. ஆண்டாள்.
2. வேதாந்த தேசிகர்.
3. பீஷ்மர்.
4. ஆளவந்தார்.
5. மந்திர மலை.
6. வரலக்ஷ்மி விரதம்.
7. ஆவணி மாதம், ரோகிணி நட்சத்திரம்.
8. சக்ர தீர்த்தம்.
9. கிந்தமர்.
10. பட்டினத்தார்.
11. நரசிம்மப் பெருமான்.
12. அஸ்வத்தாமன்.
13. புத்திர காமேஷ்டி யாகம்.
14. ஸ்ரீவாதிராஜர்.
15. ஸ்ரீகிருஷ்ணர்.

## போட்டி எண். 25

வினாடி வினா

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி கே. ஸ்ரத்தா, வேளச்சேரி, சென்னை.
2. செல்வி ப.ச.சிவரக்ஷனா ராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.
3. செல்வி சீ.தேவரதி சத்திய மங்கலம், ஈரோடு மாவட்டம்.

# தயாதேவியின் தயை

கலாச்சாரம் நிறைந்த நம் நாட்டை தாய்க்குச் சமமாக தாய் நாடு என்று கொண்டாடுகிறோம். மேலும், பாரத மாதா என்றும் அழைக்கின்றோம். நதிகளும் பெண்கள் பெயரில் ஓடுகின்றன. கற்புடைய பெண்கள் செயற்கரிய செயல்களைக் காட்டி நிரூபித்து உள்ளனர். மழை பொழி என்றால் மழை பொழிந்தது. சூரியனை உதிக்காமல் செய்தது. மும்மூர்த்திகளை குழந்தையாக ஆக்கியது. போன உயிரை யமனிடம் இருந்து வாதாடி கொண்டு வந்தது. இவ்வாறாக பெண்கள் தங்களின் சக்தியைக் காட்டி உள்ளனர்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு தாய்ப்பாலை ஊட்டி வளரச் செய்கிறாள். அது போல உலக மக்களிடையே அறிவுப் பாலை ஊட்டி நன்மை செய்ய ஸ்ரீநிவாசன் திருமலையிலே கோயில் கொண்டுள்ளான். குழந்தை தன் தாயின் மடியில் அச்சமின்றி தூங்குகின்றது. வேறு மடியில் தூங்க பயப்படுகின்றது. அதுபோல ஸ்ரீநிவாசனின் கருணையே ஒரு பெண்ணாக பாவித்து சுவாமி வேதாந்த தேசிகன் "தயாசதகம்" என்ற நூலை இயற்றினார்.

ஸ்ரீநிவாசனின் கருணை என்னும் கரும்பின் சாறு கற்கண்டாகி கருணை வடிவில் மலையானது.

**அபிநிகில லோக ஸுசரித முஷ்டிந்தய துரித மூர்ச்சநாஜுஷ்டம்**
**ஸஞ்ஜீவயது தயே மாம் அஞ்ஜன கிரிநாத ரஞ்ஜநீ பவதீ**

– தயாசதகம் 12

தெரிந்தும் தெரியாமலும் செய்யும் பாவம், புண்ணியம் இரண்டு. இதில் புண்ணியம் அதிகமிருந்து, பாவம் குறைவாக இருந்தாலும் அப்புண்ணியத்தைப் பாவம் அழித்து விடும். ஒரு பெரிய பாத்திரத்தில் நிறைய அமிர்தம் இருந்து சிறிது நஞ்சு கலந்தாலும் கெட்டுப் போய் விடும். அது போல ஸ்ரீநிவாசா உன் வார்த்தைக்கு அவள் தட்ட மாட்டாள். ஆகவே உன் மலையில் உள்ள சஞ்சீவி என்னும் மூலிகையால் என் பாவங்களைப் போக்கடிப்பாய். கற்பக மரமானது கேட்டதை எல்லாம் கொடுக்கும். கர்மயோகம், ஞான யோகம், பக்தி யோகம் செய்யத் தெரியாதவனுக்கு அவன் செய்யும் பாவங்களிலிருந்து விடுபட பிராயசித்தம் உண்டு. அதனைச் செய்ய முடியாதவர்களுக்கு






கருணாதேவியே நீ பரிகாரமாக இருந்து சம்சாரம் என்ற கடலில் இருந்து கரையேற்றுவாயாக.

*வ்ருஷகிரி க்ருஹமேதிகுணா:*
*போத பலைச்வர்ய வீர்ய சக்திமுகா:*
*தோஷா பவேயு ரேதே யதி*
*நாம தயே த்வயா விநாபூதா:* – தயாசதகம் 15

ஸ்ரீநிவாசனுடன் பிராட்டி அருகில் இல்லை என்றால் அவனுடைய ஞானம், பலம், செல்வம், சக்தி, தேஜஸ் எனும் நற்குணங்கள் எல்லாம் குற்றம் புரியத் தொடங்கி விடும். ஸ்ரீநிவாசனுடன் தாயார் சேர்ந்தே இருப்பதால் பக்தர்களின் குற்றங்கள் பகவானின் குணத்தால் அதாவது அவள் கருணையால் பக்தர்களுக்குத் துணையாகப் பயன்படுகின்றது.

இறைவன் தனக்குத் தீங்கு செய்பவர்களைக் கூட பொறுத்துக் கொள்வான். தன்னிடம் சரணம் என்று வீழ்ந்து விட்டால், அவனுக்குத் தீங்கு செய்பவர்களை விட மாட்டான். பயிர்களைக் காக்க அதிலுள்ள களைகளை அகற்றிப் பயிர் செழிக்க உதவுவதுபோல் உள்ளது அவன் கருணை.

*திசி திசி கதிவித்பிர் தேசிகைர் நீயமாநா*
*ஸ்த்திரதர மநுகம்பே ஸ்த்யாந லக்நா*
*குணைஸ்த்வம்*
*பரிகத வ்ருஷ சைலம் பார மாரோ பயந்தீ*
*பவ ஜலதி கதாநாம் போத பாத்ரீ பவித்ரீ*

– தயாசதகம் 38

பக்தர்கள் சம்சாரம் என்ற பெருங்கடலில் மாட்டிக் கொண்டு தவிக்க, அவர்களைக் கரையேற்ற தயாதேவி ஒரு படகாகவும், ஆசார்யர்கள் படகு ஓட்டுபவர்களாகவும் இருக்கின்றனர். பக்தர்களைச் சேர வேண்டிய கரைக்குக் கொண்டு சேர்ப்பது உன் தயாதேவியின் குணமே. ஸ்ரீநிவாசன் என்ற கடல் நீர் ஆவியாகி, வானத்தில் மேகமாகி, பின் குளிர்ந்து மழையைப் பொழிகின்றது. வேண்டியவன், வேண்டாதவன் என்று பிரித்துப் பொழிவதில்லை. அதுபோல உன்னுடைய மூன்று குணங்களால் குற்றங்களைப் பாராமல் உன் கருணையால் பேதமின்றி தயாதேவி பாடுபடுகின்றாள். ஸ்ரீநிவாசன் குணங்களை நாம் உயர்வாக மதிக்கின்றோம். ஆனால் அவன் தாழ்ந்த நிலையுள்ள பலரையும் நண்பனாகவும், சகோதரனாகவும், தனக்கு நிகரானவனாகவும் பார்க்கின்றான். சுக்ரீவன், சபரி, குகன், குசேலன், கூனி போன்றவர்களைத் தனக்கு இணையாக மதிப்புக் கொடுத்து அருள் செய்தவன் எம்பெருமான். இதற்கும் உடன் இருந்த தயாதேவியே காரணமாகும்.

ஒருவன் அனேக பாவங்களைச் செய்து கொண்டே வருகிறான். அவனுக்கு அறியாமலே ஒரு பயம் ஏற்படுகின்றது. அதனால் அவன் அதற்காக பிராயசித்தம் செய்து பாவத்தைப் போக்கிக் கொள்கிறான். மறுபடியும் அவன் மனம் பாவம் செய்யத் தூண்டப்படுகின்றது. ஒரு பாம்பாட்டி பாம்பை வைத்து விளையாட்டுக்களைக் காட்டி மகிழ்கின்றான். அப்பாம்பு அவனைத் தீண்டுகிறது. அதற்கான மூலிகை சிகிச்சை செய்துக் கொண்டு அவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறான். மறுபடியும் அதே பாம்பை வைத்து விளையாடச் செய்கின்றான். மீண்டும் பாம்பால் கடிக்கப்படுகிறான். அது போல் இல்லாமல் தயா தேவியே! என்னை மறுபடியும் மறுபடியும் பாவங்கள் செய்யாமல் இருக்க உன் கருணை எனக்கு வேண்டும்.

யானைக்குச் சில துற்குணங்கள் உண்டு. அதற்கு மதம் பிடித்தால் தனக்கு நாள்தோறும் உணவளித்த பாகனையே துரத்தும். நண்ணீரால் குளிப்பாட்டினாலும் புழுதியையும் சேற்றையும் தன் மேல் வாரி இறைத்துக் கொள்ளும். அதைப் பாகன் சங்கிலியால் கட்டி மதத்தை அடக்க வேண்டும். ஒரு பக்தனுக்கு சாஸ்திர அறிவு, திறமை இருந்தாலும் சாதுக்களின் அறிவுரைகளை அவன் ஏற்க மாட்டான். அதுபோல தயா தேவியே! பாவமே செய்த என்னையும் தாங்கள் தான் நல்வழியில் கொண்டு செல்ல வேண்டும்.

**– திரு.ராம சேஷசயணன்,**
**இளையாண்டிப்பட்டு**





# திருமலைவழிப்பாதை அன்றும்... இன்றும்...

உலகமுண்ட பெருவாயனான திருவேங்கடமுடையான் தான்தோன்றியாக நின்று அருள் பாலிக்கும் திவ்விய தேசமே திருமலை. திருமலைக்கும் திருமலையப்பனுக்கும் நிகரானதோ நிகரானவரோ எதுவும், எவரும், என்றும், எங்கும் இருந்திலர். தசாவதாரங்கள் எடுத்த அலுப்புத்தீர ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்தை விடுத்து பக்தர்களின் மீது உள்ள வாத்ஸல்யத்தால் புவியில் இறங்கி, ஸ்ரீவேங்கடாசல சிகரத்தின் மீது கலியுகக் கண்கண்ட தெய்வமாக, நாயகனாக இருந்து அனைவரையும் அரவணைத்துக் காத்து வரும் மனித குல தெய்வமாவார். திருவேங்கடமுடையானைத் தரிசிக்க பக்தர்கள் பாதுகாப்பாக நடைபாதையில் மலை ஏறிச் செல்வதற்கு வசதியாக தி.தி.தே. படிகளையும் சீரமைத்து குடிநீர், மேற்கூறை, பாதுகாப்பு வசதிகளையும் ஏற்படுத்தியது. மலைவழிச்சாலையில் பக்தர்களுக்கு ஏற்படும் சிறு சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை அளிக்க முதலுதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலைவழிப்பாதையிலும் வாகன போக்குவரத்திற்கு வசதியாக தடுப்பு சுவர்கள் எழுப்பியும், மலையிலிருந்து பாறைகள் உருண்டு விழாமல் இருக்க இரும்பு கம்பி வலைகளை அமைத்தும், இரவில் சாலை வளைவுகளைக் காண்பிக்கும் வகையில் ரேடியம் ஸ்டிக்கர்கள் வழிநெடுகிலும் ஆங்காங்கே அமைத்தும் பலவிதமான வசதிகளை செய்துள்ளனர்.

திருப்பதியிலிருந்து திருமலைக்கு சேருவதற்கு ரூபாய் 18 லட்ச செலவில் அமைத்த முதல் சாலை வழியை அப்பொழுது மதராஸ் கவர்னர் ஆர்தர் ஹோப் 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி ஆரம்பித்து வைத்தார். அன்றைய நாளில் 75 பேருந்துகள் ஒரு நாளைக்கு மூன்று முறை வீதம் பக்தர்களை திருமலைக்கு அழைத்துச் சென்றன. பிரம்மோத்ஸவ காலத்திலும் ஏனைய பருவநாட்களிலும் ஒரு பேருந்து 6 முறை சுற்றியது.

முதல் சாலைவழியில் ஏற்பட்ட நெரிசலைத் தவிர்க்கவும், விபரீதங்களைக் கட்டுப்படுத்தவும் இரண்டாவது சாலை வழியை அமைக்க 18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடும், அரசாங்க ஒப்புதல் பெற்றதும், 1961ஆம் ஆண்டு ஆந்திர மாநில முதலமைச்சர் டி.சஞ்சீவய்யா அவர்களால் 30-06-1961 அன்று வேலை ஆரம்பிக்கப்பட்டது. சிற்சில காரணங்களால் பணியும் தடைபட்டு வந்தது. பின்னர் பத்து வருடங்களுக்குப் பிறகு தி.தி.தேவஸ்தானம் ரூபாய் 80 லட்சம் செலவு செய்து இந்த சாலை வழியை அமைத்தது. இவ்வாறாக மலைவழிப்பாதையில் பல வசதிகளை தி.தி.தே. செய்து உள்ளது.



# ஸப்தரிஷிகள் போற்றும் ஸப்தகிரிவாசன்

விஸ்வாமித்திரர், கௌதமர், ஜமதக்னி, வசிஷ்டர், கஸ்யபர், அத்ரி, பரத்வாஜர் இவர்கள் எழுவரையும் ஸப்தரிஷிகள் என்பர். பல்லாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்து, தவ வலிமையால் நட்சத்திர மண்டலத்தில் நட்சத்திரங்களாக தற்போதும் ஒளி வீசிக் கொண்டிருப்பதை இரவு வேளைகளில் வட திசையில் நாம் தரிசிக்கலாம்.

உலக நன்மைக்காக எது செய்தாலும், எந்த லோகத்திற்குச் சென்றாலும் எல்லாவற்றையும் ஒன்றாகவே செய்வர். ஸப்தரிஷிகள் தவம் செய்யும் போது அவர்களுக்கு காலச் சக்கரம் எவ்வளவு சுற்றி உள்ளது என்பதோ, எந்த யுகத்தில் இருக்கிறோம் என்பதோ தெரியாது. ஒருமுறை தவத்திலிருந்து வெளியே வந்த ஸப்த ரிஷிகள் மும்மூர்த்திகளைத் தரிசிக்க முதலில் வைகுண்டத்திற்குச் சென்றபோது அங்கு வாயில் கதவை மூடிவிட்டு ஜெயவிஜயர்கள் விளையாடுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

ஸப்தரிஷிகள் தம் வருகையை பலவாறு ஜெயவிஜயர்களுக்கு உணர்த்தியதைக்கண்டு, "சுவாமி தாங்கள் யாரென்று எங்களுக்குத் தெரிய வில்லை. பல ஆயிரம் ஆண்டுகளாகவே ஸ்வாமி இங்கு இல்லை. எங்கு இருக்கிறார் என்பதும் எங்களுக்குத் தெரியாது" என்று தெரிவித்தனர்.

அதன் பின் கைலாயம் சென்ற ஸப்த ரிஷிகளை, ஓடி வந்து அழைத்த சிவகணங்கள் "பல ஆயிரம் ஆண்டுகளாக சிவபிரான் கைலாயத்தில் இல்லை. அவரோடு கணபதி, குமாரஸ்வாமி என அனைவரும் சென்றுள்ளனர். அவர்கள் எங்கு சென்றனர் என்பதும் எங்களுக்குத் தெரியாது" என்றனர்.

சத்ய லோகத்திற்குச் சென்ற ஸப்தரிஷிகளை வரவேற்க அங்கு யாருமே இல்லை. அப்பொழுது அங்கு வந்த நாரதர் அவர்களை வணங்கி, "ரிஷிகளே! பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரே இடத்தில் தங்களின் தரிசனம் கிட்டியது. தாங்கள் அனைவரும் இங்கு வந்ததிற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?' என ஆச்சரியமாகக் கேட்டார்.

"நீண்ட காலம் நட்சத்திர மண்டலத்தில் தவம் புரிந்த நாங்கள் மும்மூர்த்திகளைத் தரிசிக்க மூன்று லோகங்களுக்கும் சென்றால் அங்கு அவர்களைக் காண இயலவில்லை" என ஸப்தரிஷிகளும் கூறினர்.

அதற்கு நாரதர் புன்னகையுடன், "நீங்கள் எந்த லோகத்திற்குச் சென்றாலும் அங்கு அவர்கள் இருக்க மாட்டார்கள். பூலோகத்தில் பரத கண்டத்தின் தென் பகுதியில் "வேங்கடாசலம்" எனும் பெருமை வாய்ந்த மலைச் சிகரத்தின் மீது வைகுந்த வாசனான ஸ்ரீமந் நாராயணன் "வேங்கடாசலபதி"யாகக் கொலுவீற்றிருக்கின்றார் என்பது நீங்கள் அறிந்ததே. அந்த பக்த வாத்ஸல்யனுக்கு பிரம்ம தேவனின் தலைமையில் பிரம்மோத்ஸவம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் பிரம்மோத்ஸவக் கொண்டாட்டத்தினைக் காண சகல லோக வாசிகளும் கலியுக



வைகுண்டத்திற்குச் சென்றுள்ளனர். பரம சிவன் க்ஷேத்திர பாலகன், பிரம்ம தேவன் அந்த உத்ஸவத்தை நடத்துபவர். ஆதலால் அனைத்து லோகங்களும் வெறிச்சோடி காண்கின்றன. தங்களுக்கும் அழைப்பு வந்து இருக்க வேண்டுமே? தாங்கள் அனைவரும் தவத்தில் மூழ்கி இருந்ததால் தங்களுக்கு இது தெரியவில்லை போலும். மீண்டும் நாம் ஸப்தகிரியில் பிரம்மோத்ஸவத்தில் சந்திப்போம். நாராயணா... நாராயணா...” என்று கூறி அங்கிருந்து விடைபெற்றார்.

ஸப்தரிஷிகள் அங்கிருந்து புறப்பட்டப்பொழுது கருடனும் அங்கு வந்து, பிரம்ம உத்ஸவத்திற்கு அழைப்பு விடுத்தார். “ஸப்த ரிஷிகளே தங்களை நட்சத்திர மண்டலத்திலும், மூன்று லோகங்களிலும் தேடினேன். ஆனால், இங்குதான் தங்கள் தரிசன பாக்கியம் கிட்டியது. ஸப்தகிரி வாசனின் பிரம்மோத்ஸவத்திற்கு தங்களை அன்புடன் அழைக்கின்றேன் அனைவரும் வாருங்கள்” எனக் கூறி வந்த வேகத்தில் கருடன் திரும்பினான்.

ஸப்தரிஷிகளும் பிரம்மோத்ஸவத்தைக் காண ஸப்தகிரிக்கு விரைந்தனர்.

## ஏழு மலைகளின் அழகு

ஏழுமலைகளின் இயற்கை அழகின் நடுவே ஒளி வீசிக்கொண்டிருக்கும் ஆனந்த நிலையத்தினைக் கண்டு ஸப்தரிஷிகளும் வணங்கினர். ஏழு மலைகளில் எங்கு காணினும் கொண்டாட்டம் கோலாகலமாக இருந்தது. சிலர் மட்டும் செல்லக்கூடிய அந்த வைகுந்தத்தை விட தேவர்கள், யக்ஷர்கள், கிங்கரர்கள், கந்தர்வர்கள், சர்வ லோக வாசிகள், மானிடர்கள் என பக்தர்கள் ஆனந்த மகிழ்ச்சியில் தினமும் கொண்டாட்டமாக உள்ள இக்கலியுக வைகுண்டமான வேங்கடாசலமே உயர்ந்தது என எண்ணினர். பிரம்மசாரிகள், யதிகள், யோகிகள், மந்திரம் உச்சரிப்போர், மணமக்கள், சன்யாசிகள், கிரகஸ்தர்கள், வானபிரஸ்தர்கள் என லக்ஷக்கணக்கில் பக்தர்களின் கோவிந்த நாம கோஷத்துடன், பஜனைகள், நாட்டியங்கள், ஆட்டம் பாட்டங்களுடன் சங்கீத நீராஜனத்தோடும், உபாசனைகளோடும், தீப ஆராதனைகளுடனும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஏழுமலைகளின் அழகினை வார்த்தைகளால் வருணிக்க இயலாது என எண்ணி மனதிலே ஆனந்த அனுபூதியை ஸப்தரிஷிகளும் பெற்றனர்.

## பிம்மோத்ஸவ வைபவம்

ஸ்ரீவேங்கடேச மதி சுந்தர மோஹ நாங்கம்
ஸ்ரீபூமிகாந்த மரவிந்த தளாயதாக்ஷம்
ப்ராணப்ரியம் ப்ரவிமல சத்கருணாம்புராசிம்
ப்ரஹ்மேச வந்த்ய மம்ருதம் வரதம் பஜாமி

என்று முனிவர்கள் பிரார்த்தனை செய்து க்ஷேத்ர பாலகரான சிவபிரானின் மேற்பார்வையில் நான்முகனான பிரம்ம தேவனின் முன்னிலையில் சகல லோகவாசிகளும் கலந்து கொண்டு நடைபெறும் பிரம்மோத்ஸவத் திருவிழாவை முதலில் இருந்து இறுதிவரை கண்களால் கண்டு திவ்ய பிரசாதங்களையும் பெற்று ஆனந்தமடைந்தனர்.

ஸ்ரீநிவாசனின் பிரம்மோத்ஸவம் துவஜாரோஹணம் எனும் கொடியேற்றத்துடன் துவங்கியது. தினமும் காலையும், மாலையும் நடைபெற்ற பெரிய சேஷ, சிறிய சேஷ, ஹம்ச, சிம்ம, முத்துப்பந்தல்,கல்ப விருக்ஷ, சர்வபூபால, மோகினி அலங்காரம், கருட, அனுமன், யானை, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, திருத்தேர், குதிரை என பலவிதமான வாகனச் சேவைகளைக் கண்ணாரக்கண்டு ஸப்தரிஷிகளும் இன்புற்றனர்.

இறுதி நாளன்று காலை ஸ்வாமி புஷ்கரணியில் நடைபெற்ற சக்ரஸ்நானம் எனும் தீர்த்தவாரியிலும் பங்கு கொண்டனர்.



*ஸ்வாமி புஷ்கரணீ ஸ்நானம் வேங்கடேஸ்வர*
*தர்ஸனம்*
*மஹா பிரசாதஸ்வீகாரம் த்ரயம் த்ரைலோக்ய துர்லபம்.*

ஸ்வாமி புஷ்கரணி தீர்த்தம் திவ்ய ஔஷதம். திருவேங்கடவனே மருத்துவன். ஸ்வாமி புஷ்கரணி நீராடல், திருவேங்கடனின் தரிசனம், ஸ்வாமி பிர சாதம் ஏற்பதும் அற்புதமானவையாகும். ஸப்தரிஷி களும் இவை மூன்று லோகங்களிலும் எவருக்கும் கிடைக்காதவை, தமக்கு கிடைத்தன என தீர்த்தத்தில் மூழ்கி புனித நீராடி, திருவேங்கடவனைத் தரிசித்தனர்.

பிரம்மோத்ஸவத்திற்குப் பிறகு மஹா மணி மண்டபத்தில் ஆஸ்தானம் நடைபெற்றது. உத்ஸவத் திற்கு வருகைப் புரிந்த பக்தர்கள் அனைவருக்கும் திருவேங்கடவனும் வரமருளினார். சிவனும், பிரம்ம னும் ஸப்த ரிஷிகளிடம், ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு விதமாக காட்சி தந்திடும் ஶ்ரீநிவாசனின் தரிசன அனுபூதியைத் தாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுலோகத்தில் மட்டும் கூறுதல் வேண்டும். அதோடு தம் பெயரின் முதல் எழுத்தில் துவங்கி, சுருக்கமாக இருத் தல் வேண்டும் என்றனர். அங்கிருந்த அனைவரின் செவிகளும் ஸப்தரிஷிகள் என்ன துதிக்கப் போகி றார்கள் என்பதைக் கேட்டிட ஆர்வத்துடன் இருந்தன.

### ஸப்தரிஷிகளின் கவிதை கானம்

ஸப்த ரிஷிகளும் எழுந்து நின்று ஶ்ரீநிவாசனை வணங்கினர். தாயாரோடு வீற்றிருந்த ஶ்ரீநிவாசனும் அருள்புரிந்து துதியைத் துவங்கும்படி கூறினார்.

முதலில் காஷ்யப மகரிஷி பாடத் துவங்கினார்.

*காதி ஹ்ரீமந்த வித்யாயா: ப்ராப்த்யேவ பரதேவதா*
*கலௌ ஶ்ரீவேங்கடேசாக்யா தாமꣳஹம் சரணம் பஜே*

“க” வில் துவங்கி “ஹ்ரீம்” யில் முடிகின்ற 16 எழுத் துக்கள் கொண்ட ரகசிய மந்திரத்திற்குப் பிரதான பர தேவதை தற்பொழுது இக்கலியுகத்தில் வேங்கடவ னாகத் தரிசனம் அளித்துக் கொண்டிருக்கின்றார். அப் பரதேவதையின் தரிசனத்தைப் பெற்ற கஷ்யபன் எனும் நான் சரணடைகின்றேன்.

பின்னர் அத்ரி மகரிஷி தம் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு வணங்கி பாடத் துவங்கினார்.

*அகாராதி க்ஷ காராந்த வர்ணை ய:*
*ப்ரதிபாத்யதே*
*கலௌ ஸ வேங்கடேசாக்ய: சரணம் மே*
*ரமாபதி:*

“அ” காரத்தில் துவங்கி “க்ஷ” காரம் வரை உள்ள எழுத்துக்களால் முன் மொழி யப்பட்ட இரமாபதி இக்கலியுகத்தில் திருவேங்கடவனாகத் தரிசனம் அளிக் கின்றார். அத்ரி மகரிஷியான நான் அந்த எம்பெருமானை சரணமடைகின்றேன்.

பின்னர் பரத்வாஜ மகரிஷியும் தம் சுலோகத்தால் புகழ்ந்தார்.

*“பகவான் பார்கவீகாந்தோ பக்தாபீப்ஸித*
*தாயக:*
*பக்தஸ்ய வேங்கடேசாக்யோ பரத்வாஜஸ்ய மே*
*கதி:*

பார்கவி என்பது மஹாலக்ஷ்மித் தாயாரின் திருநாமம். சாக்ஷாத் பார்கவிகாந்தன் ஶ்ரீநிவாசன். பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுபவனான அந்த வேங்கடவனிடம் பரத்வாஜர் எனும் நான் சரணாகதி வேண்டு கிறேன். எனக்கு தங்களைத் தவிர வேறு கதியில்லை.

பின் விஸ்வாமித்திரர் ஶ்ரீநிவாசனைக் கண்ணாரத் தரிசித்து பாடத்துவங்கினார்.

*வீராட் விஷ்ணு: விதாதா ச விஸ்வம்*
*விக்ஞான விக்ரஹ:*
*விஸ்வாமித்ர ஸ்ய சரணம் வேங்கடேச*
*விபுஸ்ஸதா*

விராட்புருஷனான ஶ்ரீமஹா விஷ்ணுவே இந்தத் திருவேங்கடவன்.



இந்த உலகம் யாவும் விக்ஞான விக்ர கனான அந்த ஸ்ரீநிவாசனின் திருவடி வமே. அந்த ஜகத்புருஷனான திருவேங்கடவனை இந்த விஸ்வா மித்திரன் சரணடைகின்றேன்.

அதன்பின் கௌதம மகரிஷி ஸ்வாமியைத் துதித்துப் பாட வந்தார்.

*கௌ: கௌரீச ப்ரியோ நித்யம் கோவிந்தோ கோபதி ர்விபு:*
*சரணம் கௌதமஸ்யாஸ்து வேங்கடாத்ரி சிரோமணி:*

கௌரிக்குப் பிரியமானவர் ஈஸ்வரன். ஈஸ்வரனுக்கு மிகவும் பிரியமானவர் இந்த கோவிந்தன். பசுக்களைக் காத்திடும் கோபாலன். கோபியருக்களுக்கு பதி. அனைத்து உயிர்களுக்கும் தலைவனானவன். தற்போது வேங்கடாத்ரி சிரோமணியாகத் தரிசனம் அளித்து கொண்டிருக்கும் ஸ்ரீநிவாசனை இந்த கௌதம மகரிஷி சரணமடைகின்றேன்.

அதன் பின்னர் ஜமதக்னி மகரிஷி துதிக்கலானார்.

*ஜகத்கர்தா ஜகத்பர்தா ஜகத்தர்தா ஜகன்மயா:*
*ஜமதக்னி: ப்ரபன்னஸ்ய ஜீவேசோ வேங்கடேஸ்வர:*

அனைத்து லோகங்களையும் வழி நடத்துபவர். அனைத்தையும் தானே சுமக்கக் கூடியவர். தரித்துக் கொண்டிருப்பவரும் அவனே. எங்கும் வியாபித்திருக்கும் ஜகந் நாதன், அனைத்தும் அவனே ஆன திருவேங்கடவனை இந்த ஜமதக்னி சரணம் அடைகின்றேன்.

இறுதியாக வசிஷ்ட மகரிஷி துதிக்கலானார்.

*வஸ்து விக்ஞான மாத்ரம் ய ந்நி ர்விசேஷம் சுபம்ச சத்*
*தத் ப்ரஹ்மைவா ஹ மன்வீதி வேங்கடேசம் பஜே ஸதா*

அடியவர்களான பக்தர் களுக்கு வரங்களை அளித்து சாக்ஷாத் பரபிரம்மமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் வேங்கடவனை இந்த வசிஷ்ட மகரிஷி என்றென்றும் துதித்துக் கொண்டிருப்பேன்.

இந்தச் சுலோகங்களைக் கேட்டு சபையில் இருந்த பிரம்மாதி தேவதைகள் அனைவரும் கை தட்டி பாராட்டினர். பின்னர் திருவேங்கடமுடையான் ஸப்தரிஷிகளைப் பார்த்து, ரிஷிகளே நீங்கள் துதித்த இந்தச் சுலோகங்கள் மிகவும் மகிமை வாய்ந்தவை. இவற்றை யாரொருவர் துதித்தாலோ, பாராயணம் செய்தாலோ அவர்களின் பாவங்கள் யாவும் விலகிடும். தோஷங்கள் தீர்ந்திடும். அதுமட்டுமின்றி நற்பலன்களும், செல்வ செழிப்பும் கிட்டிடும் என்று கூறி ஸப்தரிஷிகளுக்கும் அருள் புரிந்தார்.

*ஸப்த ரிஷிகள் ஸப்தகிரி வாசனைத் துதித்த இந்தத் துதிகள் திருவேங்கடமுடையானுக்கு மிகவும் விருப்பம் ஆனவை. பக்தர்களுக்கு அனைத்தையும் வழங்கக் கூடியவை.*

ஸப்தரிஷிகள் கூறிய இத்துதியைக் கேட் டாலோ, படித்தாலோ பயம் விலகிடும். அனைத்திலும் வெற்றிக் கிட்டிடும் என பிரம்மாதி தேவதைகளும் கீழ்க்காணும்படி கூறலாயினர்.

*ஸப்தரிஷி ரசிதம் ஸ்தோத்ரம் ஸர்வதா ய: படேன்னர:*
*ஸோடபயம் ப்ராப்னுயாத் ஸத்யம் ஸர்வத்ர விஜயீ பவேத்*

ஸப்தரிஷிகளும் தங்களின் யாத்திரையைக் கலியுக வைகுண்டத்தில் முடித்துக்கொண்டு, தாம் அனுபவித்த, அனுபூதி பெற்ற ஆன்மீக ஆனந்தத்தை நினைவு கூர்ந்து நட்சத்திர மண்டலத்தை மீண்டும் அடைந்தனர். இவ்வாறாக ஸப்தரிஷிகள் துதித்த ஸப்தகிரி வாசனின் துதிகள் அன்று முதல் இன்று வரை திருவேங்கடமுடையானுக்கும், அவனின் பக்தர்களுக்கும் விருப்பமானதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தெலுங்கு மூலம் :
திரு. ஜெ.பாலசுப்பிரமண்யம், திருப்பதி.
தமிழாக்கம்
திரு. வி.ஒ. சுரேஷ், சத்திரவாடா.

# திருமலை தரிசனம்

***"மானிட சேவையே மாதவன் சேவை"*** என்று சொல்வதுண்டு. அதன்படி திருமலைக்கு வரும் சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களின் யாத்திரையைச் சிறப்பாக நிறைவேற்ற பல முயற்சிகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் தினம் தினம் மேற்கொண்டு வருகிறது.

ஏழுமலையானின் தரிசனத்திற்காக திருமலைக்கு பல நூறு கிலோ மீட்டர் தூரம் கடந்து வரும் பக்தர்களுக்கு இலவச உணவு, குடிநீர், தலைமுடி இறக்குதல் மற்றும் தங்குவதற்கான விடுதி வசதி ஏற்பாடுகள் எப்பொழுதும் உண்டு.

ஒவ்வொரு நாளும் திருமலைக்கு சராசரியாக 70000 – 80000 பக்தர்கள் வருவதுண்டு. பக்தர்கள் கூட்டத்தை செம்மனே மேலாண்மை செய்யும் முறையும், சீராக டோக்கன்கள் வழங்கும் முறையும் இங்கு தேவஸ்தானத்தினரால் மிகவும் நேர்த்தியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருப்பதிக்கு பேருந்தில் அல்லது ரயிலில் வந்து இறங்கும் பக்தர்கள் திருமலைக்கு வந்த பிறகு ஒரு ரூபாய் கூட செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல், முற்றிலும் இலவசமாகவே தங்கள் திருமலை யாத்திரையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். திருமலைக்கு நடைபாதை வழியாக நடந்துச் செல்ல விரும்பும் பக்தர்களுக்கு (அலிபிரி மற்றும் ஸ்ரீவாரி மெட்டு) ஏதுவாக ரயில் நிலையத்திலிருந்து இலவசப் பேருந்தும் இயக்கப்படுகின்றது. மேலும், திருமலையில் அனைத்து வசதிகளும் பெரும்பாலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. உண்ண "அன்னப் பிரசாதம்" என்ற பெயரில் அறுசுவை உணவு, குடிக்க சுத்திகரிக்கப்பட்ட ஜலப்ரசாதம் எனும் பெயரில் குடிநீர், தங்குவதற்கான இலவசக் கூடங்கள், பொருட்களை வைத்துக்கொள்ள லாக்கர் வசதி, தலைமுடியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க கல்யாணகட்டா, குளியலறை மற்றும் கழிவறை. இப்படி எல்லாமே திருமலையில் இலவசம் தான். லாக்கர் மற்றும் அறைக்கு வைப்பு நிதியாக கொஞ்சம் பணம் செலுத்த வேண்டி இருக்கும். அறையைக் காலி செய்யும்போது அதுவும் திருப்பி தரப்படும்.

மொத்தத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம், எந்தப் பொருளாதார நிலையைச் சேர்ந்த பக்தர்களும் திருமலைக்கு எளிதில் வந்து நேர்த்திக்கடன் செலுத்தி திரும்பிச் செல்லலாம் என்ற நம்பிக்கையை அளிக்கின்றது.

இதர கோயில்களில் இரண்டு அல்லது மூன்று வகையான தரிசன மார்க்கங்களே உள்ள நிலையில், திருமலையில் மட்டும் பக்தர்களுக்கு பல்வேறு தரிசன வழிகள் உள்ளன. பக்தர்கள் முதலாவதாக தேர்ந்தெடுப்பது சர்வ தரிசனம். இது பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லாத தரிசன முறையாகும். இது டைம் ஸ்லாட் எனப்படும் நேரம் ஒதிக்கீடு தரிசன டோக்கன் முறை ஆகும்.





**திரு.அத்தி ரங்கராஜன்,**
**திருப்பதி.**




இதன்படி, கீழ்த் திருப்பதிக்கு வந்தடைந்த பக்தர்கள் பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள "ஸ்ரீநிவாசம்" பக்தர்கள் தங்கும் விடுதியிலோ, ரயில் நிலையத்திற்கு எதிரே உள்ள "விஷ்ணு நிவாஸம்" பக்தர்கள் தங்கும் விடுதியிலோ அல்லது மலையடிவாரத்தில் அலிபிரி அருகில் உள்ள பூதேவி விடுதியிலோ நேரடியாக வந்து ஆதார் அட்டையைக் காண்பித்து தங்களுக்கு ஒதுக்கப்படும் நேரத்திற்குச் சென்று ஸ்வாமியைத் தரிசனம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த டோக்கன்கள் தினமும் அதிகாலையில் முதலில் வருபவர்களுக்கே முன் உரிமை எனும் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இதனால் வரிசையில் மணிக்கணக்காக நிற்க வேண்டிய அவசியம் இருக்காது. பல்வேறு காரணங்களால் ஏற்படும் தாமதங்களையும் தவிர்க்கலாம்.

எவ்வித முன்னேற்பாடும் இல்லாமல் நேராக திருமலைக்கே சென்று விடும் பக்தர்களும் உண்டு. அவர்களுக்கும் வைகுண்டம் இரண்டாவது கட்டிடத் தொகுதி வழியாக தரிசனத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டு உள்ளது. இதில் ஸ்வாமி தரிசனத்திற்கு கூடுதல் நேரமாகும்.

அடுத்ததாக சிறப்பு தரிசன முறை. ரூபாய் 300/– செலுத்தி இந்த டிக்கெட்டை இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ள வேண்டும். நடுத்தர மக்களும் மிகவும் எளிமையாக முன்பதிவு செய்து, தரிசனம் செய்யும் வாய்ப்பை அளிக்கின்றது.

திருப்பதியில் இருந்து திருமலைக்கு நடந்து வரும் பக்தர்களுக்காக கொண்டு வந்த முறை "திவ்விய தரிசனம்". திருமலைக்கு நடந்தே வருவதாக வேண்டிக் கொண்டு, காலணிகள் அணியாமல் தினசரி நூற்றுக்கணக்கான பக்தர்கள் மலையேறி வருவது வழக்கம். இவர்களின் அசதியையும், தளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, இவர்கள் சாதாரண வரிசையில் கூட்டத்தில் மாட்டிக்கொண்டு அவதிப்படாமல் இருக்க தேவஸ்தானத்தினர் அறிமுகப்படுத்திய தரிசன முறையே இந்தத் திவ்விய தரிசனம் ஆகும்.

பாத யாத்திரையாகக் கிளம்பும் பக்தர்கள் மலை அடிவாரத்தில் டோக்கன் பெற்றுக் கொண்டு, அதை நடைபாதையின் நடுவழியில் ஓரிடத்தில் இருக்கும் கவுண்ட்டரில் காண்பித்து ஸ்கேன் செய்து கொண்டு தொடர்ந்து மலையேற வேண்டும். இவர்களுக்கு கோயிலில் ஒரு தனி வரிசை உண்டு. தற்பொழுது இவ்வசதி ஸ்ரீவாரி மெட்டு நடைபாதையில் மட்டுமே செயல்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள். அத்தகைய குழந்தைகள் அதிலும் ஒரு வயதிற்கு

# திருமலை தரிசனத்தில் மூத்த குடிமக்களும் மாற்றுத்திறனாளிகளும்...



மூத்தக்குடிமக்கள், அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நிறுவிய ஒரு தரிசன முறை இது. அவர்கள் தேவஸ்தானத்தின் இணைய தளத்திற்குச் சென்று முன்பதிவு செய்து கொண்டு திருமலைக்கு வர வேண்டும். தெற்கு மாட வீதியில் அமைந்துள்ள திருமலை நம்பிகள் சன்னதி அருகில் இருக்கும் கூடத்திலிருந்து மதியம் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

65 வயது நிறைந்தவர்கள் மூத்தக்குடிமக்களாகக் கருதப்படுவார்கள். அவர்களுடன் அவரது துணைவன் அல்லது துணைவியைக் கூட்டிச் செல்ல அனுமதிப்பர். இதற்கான தரிசன டோக்கன் பெற்றவர்கள் ஆதார் அட்டையை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். அதேபோல், மாற்றுத் திறனாளிகள் அவர்களுக்கு அரசு வழங்கிய மருத்துவச் சான்றிதழைக் கொண்டு செல்ல வேண்டும்.

இது போலவே, இதயம், மூளை, கல்லீரல், முதுகுத் தண்டு அறுவைச் சிகிச்சை ஆனவர்கள், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, டயாலிசிஸ் மற்றும் புற்று நோய் உறுதியானவர்கள் தங்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணரின் தகுந்த சான்றிதழுடன் வர வேண்டும். அவர்களுடன் அவரது கணவன் அல்லது மனைவியைக் கூட்டிச் செல்ல அனுமதிப்பர்.

உட்பட்ட கைக்குழந்தைகள் கூட்ட நெரிசலில் கஷ்டப் படக்கூடாது என்று தி.தி.தே. கைக்குழந்தையோடு வரும் பெற்றோர்களுக்கு திருமலையில் தெற்கு மாட வீதியில் அமைந்துள்ள சுபதம் நுழைவாயில் வழியாக நேரடியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர். கைக் குழந்தையின் பெற்றோரின் ஆதார் அட்டை மற்றும் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் காண்பித்து நண் பகல் 12.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சுபதம் வாயிலாகத் தரிசனம் செய்யலாம். திருவிழாக் காலங் களில் இத்தரிசன முறை மாறுதலுக்குட்பட்டது.

பாழடைந்த கோயில்களைச் சீரமைக்க, புதிதாக மண்டபங்களை நிர்மாணிக்க, நமது கலாச்சாரத்தை கட்டிக் காக்க தேவஸ்தானத்தினர் நிறுவியது "ஸ்ரீவாணி அறக்கட்டளை". இந்த அறக்கட்டளைக்கு ரூபாய் 10,000/- நன்கொடை அளித்தவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையிலும், வி.ஐ.பி. தரிசனம் அளிக்கப்படுகிறது. ரூ.10,500/- (ரூ.10,000/- + ரூ.500/-) செலுத்திய ஒருவருக்கு இச்சிறப்பு தரிசனம் கிடைக்கும். ஸ்ரீநிவாச திவ்ய அனுகிரஹ ஹோமம், அங்கப் பிரதக்ஷிணை போன்ற தரிசனங்களும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

"ஸ்ரீவாரி சேவகர்" எனும் தன்னார்வ தொண்டு புரிபவர்களுக்கு சிறப்பு முன்னுரிமை உண்டு. திருமலையில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க, வரிசையை மேம்படுத்த, மலர்கள் தொடுக்க, உணவு பரிமாற என்று பலவித வேலைகளுக்கு தன்னார்வத் துடன் பக்தர்கள் முன்னுக்கு வருவது உண்டு. "பரக்காமணி" எனும் உண்டியலில் சமர்ப்பிக்கப்பட்ட பணத்தை எண்ணும் நிகழ்வை கண்காணிக்கவும் பக்தர்களில் இருந்து ஒருவரை அழைப்பதுண்டு.

இப்படி தன்னார்வத்துடன் இறைவனுக்கு தொண்டு செய்ய முன்வருவோருக்கும் தரிசனம் அளிப்பதுண்டு. தன்னார்வத்துடன் இந்த இறைத் தொண்டினை செய்திட விரும்புவோர் தி.தி.தே. இணையதளத்தில் முன்பதிவு செய்து கொண்டு திருமலைக்கு வர வேண்டும்.

தரிசனம் தொடரும் ...

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# நவராத்திரி விழா நாயகி

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை,
8610819456.















கைலாச வாசனான ஈசனின் உடலில் சரிபாதியான மலைமகள் இச்சா சக்தியாகவும், பாற்கடல் வாசனான பரந்தாமன் திருமார்பில் வசிக்கும் அலைமகள் கிரியா சக்தியாகவும், நான்முகன் நாவில் நடமாடும் கலைமகள் ஞானசக்தியாகவும் அருளும் முப்பெரும் தேவியர்க்கும் மும்மூன்று நாள் வீதம் ஒன்பது நாள்களுக்குச் செய்யப்படும் பூஜைதான் நவராத்திரி விழாவாகும்.

வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வரும் அமாவாசை முதல் நவமி வரையிலான திதிகள் மகாசக்திக்கு உகந்த தினங்களாகும்.

இந்த 12 மாதங்களுக்கும் பன்னிரண்டு விதமான நவராத்திரிகள் உண்டு என்கின்றன சாக்த சாஸ்திரங்கள். அந்த பன்னிரண்டிலும் மிக முக்கியமானவை இந்த நான்கு நவராத்திரிகளாகும்.

பங்குனி மாதம் அமாவாசைக்குப் பின் வரும் 9 நாட்கள் “வசந்த நவராத்திரி” என்றும், ஆனி மாதம் அமாவாசைக்குப் பின் வரும் 9 நாட்கள் “ஆஷாட நவராத்திரி” என்றும், புரட்டாசி மாதம் அமாவாசைக்குப் பின்வரும் 9 நாட்கள் “சாரதா நவராத்திரி” என்றும், தை மாதம் அமாவாசைக்குப் பின் வரும் 9 நாட்கள் “மகா நவராத்திரி” என்றும் அழைக்கப் படுகின்றன.

**நவராத்திரி நாயகி அவதாரம் உருவான புராண வரலாறு:**

தநு என்னும் மன்னனின் மகன்கள் இரம்பன், கரம்பன் ஆவார்கள். இவ்விருவருள் ஒருவனான கரம்பன் என்பவன் தீர்த்தத்தில் மூழ்கி மாபெருந்தவம் இயற்றினான்.

| |
|---|
| **மிக அரிதான சிற்ப வடிவம் இந்திரனை வென்ற மகிஷாசூரன் கரங்களில் ஆயுதம் ஏந்தி இந்திரனின் வாகனமான ஐராவதத்தின் மீதேறி வரும் போது நாட்டிய மங்கைகள் கவரி வீசி அவனை மகிழ்விக்கும் காட்சியுடைய சிற்பம் - தாராசுரம்** 1 |
| **நவராத்திரி நாயகியான ஸ்ரீ துர்க்காம்பிகை மகிஷாசூரனை வதம் செய்ய சிம்ம வாகனத்தின் மீதேறி அஷ்ட கரங்களில் ஆயுதம் ஏந்தி மகிஷனுடன் போர் புரிய வருகை தரும் காட்சியுடைய சிற்பம் - தாராசுரம்** 2 |
| **நவராத்திரி நாயகியான ஸ்ரீ துர்க்காம்பிகை கரங்களில் ஆயுதம் ஏந்தி மகிஷாசூரனை வதம் செய்யும் நிறைவு காட்சியுடைய சிற்பம் - தாராசுரம்** 3 |
| **நவராத்திரி நாயகியான ஸ்ரீ துர்க்காம்பிகை மகிஷாசூரவதத்திற்கு பின் கோபம் தணிந்து சாந்தம் தவழ அஷ்ட கரங்களில் ஆயுதம் ஏந்தி சிம்ம வாகனத்துடன், திருவடியில் மகிஷனின் சிரசுடன் எழுந்தருளியுள்ள அன்னையை தேவர்கள் வணங்கி மகிழும் காட்சியுடைய சிற்பம் - தாராசுரம்** 4 |

கரம்பனுடைய தவத்தின் வேகத்தை உணர்ந்து இந்திரன் முதலை உருக்கொண்டு நீரில் மறைந்து வந்து, கரம்பனை இழுத்துச் சென்று கொன்று விட்டான்.

இரம்பனோ பஞ்சாக்கினியின் நடுவில் நின்று அக்னி தேவனை நோக்கித் தவம் செய்ய, அக்னி தேவன் இரம்பனுக்கு காட்சியளித்து அவனுக்கு ஒப்புயர்வற்ற மகன் உண்டாகுமாறு வரம் அளித்து மறைந்தான்.

அதனைத் தொடர்ந்து இரம்பனுக்கு ஒரு எருமை தலையுடன் கூடிய ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே மகிஷன் என்னும் அசுரன் ஆவான்.

இவன் ஒரு சமயம் பிரம்மதேவனைக் குறித்துக் கடுந்தவம் இயற்றி “பெண்களைத் தவிர வேறு யாராலும் நான் மரணம் அடையக் கூடாது” என்ற வரத்தைப் பெற்றான்.

வரத்தைப் பெற்ற மகிஷன் அகந்தையுடன் இந்திரன் மீது போர் தொடுக்க, இந்திரனோ அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டான். பின்பு அவனின் வாகனமான ஐராவதத்தின் மீது ஏறி தன் தலைநகரத்தை அடைந்தான்.

அதனைத் தொடர்ந்து கருணாமூர்த்தியான சிவபெருமான் திருவடியில் இந்திரன் மகிஷனை அழிக்க உபயம் ஒன்றை நல்க வேண்டி விண்ணப்பம் வைக்க, ஈசனும் தன்னில் சரி பாதியாகிய அன்னை மகாசக்தியின் மறு வடிவாக துர்கையை எழுந்தருளச் செய்து தேவர்களின் துக்கத்தைப் போக்க மகிஷனை வதம் செய்ய வேண்டினார்கள்.

அதனைத் தொடர்ந்து துர்க்கை அஷ்ட திருக்கரங்களில் ஆயுதம் ஏந்தி, சிம்ம வாகனத்தில் ஏறி மகிஷனை வதம் செய்து தேவர்களின் கவலைகளைப் போக்கினாள் என்பதும், மகிஷனின் வேண்டுதல்படி அவனது சிரசை தனது திருவடியில் வைத்து நல்லருள் புரிந்தாள் என்பதும் ஸ்ரீதேவி மகாத்மியம், ஸ்ரீதேவி பாகவதம் போன்ற நூல்கள் வழங்கும் புராண வரலாறு வழி அறியலாம்.

நவராத்திரியின் சிறப்புக்களை எடுத்து உரைக்கும் மேற்கண்ட புடைப்புச் சிற்பங்கள் நான்கும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் மிளிரும் கும்பகோணம் அருகிலுள்ள தாராசுரம் ஐராதீஸ்வரர் ஆலயத்தின் இராஜகம்பீர மண்டபத் தூண் சிற்பங்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

நமது பாரத தேசத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நவராத்திரி விழா கொண்டாடப் படுகிறது. அண்டை மாநிலமான கர்நாடகத்தில் சாமுண்டீஸ்வரி தேவி ஆலயத்தில் தசரா பண்டிகையாகவும், சிருங்கேரி சாரதாம்பாள் ஆலயத்தில் சிறப்பு விழாவாகவும், கேரளாவில் விஜயதசமியன்று அக்ஷராப்பியாசம் என்று குழந்தைகளுக்கு கல்வியைக் கற்க எழுதும் பயிற்சியைக் கற்றுத் தரும் விழாவாகவும், குஜராத்தில் ஒன்பது நாட்களும் இரவு கர்பா என்னும் நடனமாடி அன்னையை வழிபடுகின் றனர்.

வடநாட்டில் ஒரு சில சமூகத்தினர் கடுமையான விரதம் இருந்து அன்னையை நவதுர்கையாக வழிபடுகின்றனர். ஒரு சிலர் இதை இராமலீலாவாக, இராமர் இராவணன் வெற்றி கொண்டதைத் கொண்டாடுகின்றனர். ஒன்பது நாட்கள் இராமாயணம் பாராயணம் செய்கின்றனர். பத்தாம் நாள் விஜய தசமியன்று இராவணன், இந்திரஜித், கும்பகர்ண்ன் ஆகிய அசுரர்களின் பொம்மைகளைத் தீ வைத்து கொளுத்தி விழாவை நிறைவு செய்கிறார்கள். இப்படி இந்தியா முழுவதும் நவராத்திரி விழா பல முறைகளில் பல விதமான பெயர்களில் கொண்டாடப்படுவது கூடுதல் சிறப்பாகும்.

### ஸ்ரீவகுளமாதா திருக்கோயில் - பேரூரு, திருப்பதி

திருவேங்கடவனின் வளர்ப்புத் தாயாரான வகுள மாதா துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் வளர்ப்புத் தாயாரான யசோதா தேவியேயாவார். ஸ்ரீகிருஷ்ணரை வளர்த்த தன்னால் அவனுடைய திருமணத்தைக் காண இயலவில்லையே என்று வருந்திய யசோதையின் வருத்தத்தைப் போக்கிட கலியுகத்தில் தன் திருமணத்தை நடத்தி வைக்கும் பாக்கியம் தங்களுக்கு கிடைத்திடும் என ஸ்ரீகிருஷ்ணர் உறுதியளித்தார். அதன்படியே கலியுகத்தில் திருவேங்கடவன்–வகுள மாதா “தாய்–தனயன்” உறவிற்கு எடுத்துக்காட்டாக விளங்கி, திருவேங்கடமுடையானுக்கும் பத்மாவதித் தாயாருக்கும் திருக்கல்யாணத்தை நடத்தி அதனைக்கண்டு ஆனந்தபரவசமடைந்தார்.

திருப்பதி அருகே பேரூரு பாதகால்வாய் என்ற இடத்தில் பேரூரு பண்ட என்ற கருங்கல் பாறை மீது திருவேங்கடவனின் வளர்ப்புத் தாயாரான வகுளமாதாவிற்கு தனி ஆலயம் ஒன்று உள்ளது. இந்த ஆலயமானது பசுமையான இயற்கை எழில் நிறைந்த கிராமத்தில் ஒரு குன்றின் மேல் அமைந்துள்ளது காண் போர் கண்ணிற்கு இன்பத்தை அளிக்கின்றது. திருப்பதியிலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்தில் சந்திரகிரி செல்லும் சாலையில் அமைந்துள்ள இவ்வாலயம் தி.தி.தேவஸ்தானத்தினரால் சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சின்னஞ்சிறிய படிகளில் ஏறியவுடன் அழகிய உயர்ந்த ராஜ கோபுரம் நம்மை அன்புடன் வரவேற்கிறது. உள்ளே நுழைந்ததும் ஸ்ரீவகுள மாதா நான்கு திருக்கரங்களுடன் பத்மம் மீது அமர்ந்த நிலையில் இருப்பதை தரிசிக்கலாம். ஆகமப்படி நித்ய பூஜைகள், அபிஷேகம் மற்றும் பல உற்சவங்கள் இங்கு நடைபெறுகின்றன.

### ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி - ஸ்ரீவாரி மெட்டு

திருவேங்கடமுடையான் பத்மாவதி தேவி திருக்கல்யாணத்திற்குப் பின்னர் இந்தப் புனிதமான வழியாகத் திருமலைக்கு நடந்து சென்றதால் இப்பகுதிக்கு ஸ்ரீவாரி மெட்டு (ஸ்ரீவாரி மெட்டு = ஸ்ரீவாரி என்றால் திருவேங்கடவன், மெட்டு என்றால் படி) எனப் பெயர் ஏற்பட்டது. இங்கு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு ஆலயம் அமைந்துள்ளது. இது திருப்பதியில் இருந்து 18 கி.மீ. தூரத்திலும், ஸ்ரீநிவாச மங்காபுரத்திலிருந்து 6 கி.மீ. தூரத்திலும், அலிபிரியிலிருந்து 16கி.மீ. தூரத்திலும் அமைந்து உள்ளது. இங்கிருந்து திருமலைக்குச் செல்ல நடைபயணநேரம் மிகவும் குறைவே ஆகும். இப்பாதையில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தி.தி.தே. ஏற்பாடு செய்து உள்ளதால் பக்தர்களும் சிரமம் இன்றி “கோவிந்தா... கோவிந்தா... ஸ்ரீஸ்ரீநிவாசா கோவிந்தா...” என்ற கோவிந்த திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே நடந்துச் சென்றால் விரைவில் திருமலையை அடையலாம்.








## ஸ்ரீஸ்ரீநிவாசா கோவிந்தா...

- திரு. பரந்தாமன்,
திருப்பதி.

# திருமலை குறித்த குறுக்கெழுத்துப் புதிர் -99



**இடமிருந்து வலம்**

01. கோதண்ட ராமர் எழுந்தருளுவது ...(9).
03. திருமலையில் இரத்த தானம் செய்வோர்......(9)வழியே இலவச தரிசனத்திற்குச் செல்வர்.
05. திருமலையில் அனைத்து பக்தர்களுக்கும் தரப்படுவது....(8)
07. திருமலையில்.......(4) (திருக்கரத்தில் ஏந்தியுள்ளது) தீர்த்தம் அமைந்துள்ளது.
14. ஐந்தாம் நாள் இரவு ஸ்வாமி எழுந்தருளுவது....(7)
17. திருமலையில் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறுமிடம் .....(11)

**வலமிருந்து இடம்**

12. நரசிம்மப் பெருமானைச் சுமப்பது .....(3) வாகனம்
15. வெண்ணெய்க்குடத்துடன் எழுந்தருளும் கண்ணன்...(9)

**மேலிருந்து கீழ்**

02. திருமலையப்பன் ஏழு குதிரைகள் பூட்டி எழுந்தருளுவது......(10)
03. திருமாலை துயிலெழுப்பப்பாடப் படுவது....(6)
04. பிரம்மோற்சவ நிறைவு நாளில் ஸ்வாமி புஷ்கரணியில் நடைபெறுவது.....(11)
06. ஸ்ரீபத்மாவதித் தாயாரின் மணாளன்.....(5)
07. நான்கு மாடவீதிகளை....(5) வீதிகள் என்பர்.
08. திருமலையப்பன் சரஸ்வதி அலங்காரத்தில் எழுந்தருளுவது ....(3) வாகனம்
09. அமிர்தத்தை பகிர்ந்தளித்த அவதாரம்....(3) வடிவம்.
11. 6ஆம் நாள் மாலையில் வலம் வருவது ....(3) ரதம்

தொகுப்பு : திரு.டி.ஆர், மனோகர், தஞ்சாவூர், 99426 44807.

புதிருக்கு விடை அறிய 43ம் பக்கம் பார்க்கவும்...

**கீழிருந்து மேல்**

10. பிரம்மோத்ஸவத்தின் போது முதலில் செல்வது.....(4) ரதம்.
12. இரண்டாம் நாள் காலை நடைபெறுவது...(5) வாகனம்.
13. வேண்டும் வரங்களை அளிப்பது....(7)
14. 6ஆம் நாள் இரவு ஸ்வாமி எழுந்தருளுவது ....(6)
16. 8ஆம் நாள் காலை பவனி வருவது...(6)
17. பிரம்மோத்ஸவத்தை முன்னின்று நடத்துபவர்...,(6)
18. திருச்சானூரில் அருள்புரியும் திருவேங்கடவனின் பட்டத்து ராணி....(9)

**'உங்களுக்காக நாங்கள்'**

உங்கள் ஆலோசனைகள்/தரிசனம், சேவைகளுக்கு தொடர்பு கொள்ள...

**டோல் ப்ரீ எண் 1800-425-4141**



# புரட்டாசியில் பெருமாள் தரிசனம்



திரு.அறந்தாங்கி சங்கர்,
சென்னை,94441 60161

### சின்ன திருப்பதி வேங்கடேசப் பெருமாள், சேலம்

திருப்பதி செல்ல இயலாதவர்களின் குறையைப் போக்கும் வகையில் சேலம் சின்ன திருப்பதி வேங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திகழ்கிறது.

சேலத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள இக்கோயில் 250 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. குன்றின் மீது பாம்புப் புற்று ஒன்று இருந்ததாகவும், சிறுவன் ஒருவனால் இங்கு ஸ்வாமி சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் சிறுவனின் பக்தியை மெச்சிய திருமால் அவனுக்குக் காட்சி கொடுத்து அருள்பாலித்த தலமே இது என்று கூறப்படுகிறது. இக்கோயிலில் மூலவராக வேங்கடேசப் பெருமாள் காட்சி தருகிறார்

மஹாலக்ஷ்மி, ஆண்டாள், ரங்கநாதர், சக்கரத்தாழ்வார், இராமாநுஜர் என ஒவ்வொருவருக்கும் தனித்தனி சன்னதி உள்ளது. புரட்டாசி மாதத்தின் எல்லா நாட்களும் இக்கோயிலில் ஸ்வாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடக்கிறது. மேலும் மார்கழி மாதம், சொர்க்க வாசல் திறப்பு, கோயில் திருத்தேரோட்ட நிகழ்வு என எல்லாமே சிறப்பாக நடைபெறுகிறது. தன்னை நம்பி வரும் பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை அள்ளி வழங்குகிறார்.

### செல்வம் அருளும் வேங்கடேசப் பெருமாள் திருக்கோயில், மந்தைவெளி, சென்னை.

சென்னை மந்தைவெளி மார்க்கெட் பகுதியில் மாரிச்செட்டித் தெருவில் வேங்கடேசப் பெருமாள் ஆலயம் உள்ளது. சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் மயிலாப்பூரில் வாழ்ந்து வந்த பத்மசாலியர் தற்போது ஆலயம் இருக்கும் இடத்தில் சிறிய சன்னிதியில் மூலவர் வேங்கடேசப் பெருமாள் மற்றும் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சிமார்கள் உற்சவ சிலைகளை எழுந்தருளச் செய்தனர். அனுமனுக்கும், சக்கரத்தாழ்வாருக்கும் 30 வருடங்களுக்கு முன் தனிச் சன்னதிகள் அமைக்கப்பட்டன.

### பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் திருக்கோயில், கோட்டூர், சென்னை

இங்கு நின்ற நிலையில் அருள்மிகு பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் காட்சியளிக்கிறார். உட்புறத்தில் அருள்மிகு அலர்மேல் மங்கைத் தாயார், ஆண்டாள், ஆழ்வார்கள் மற்றும் ஆசாரியர்கள் காட்சியளிக்கின்றார்கள். மேலும், வெளிப்பிரகாரத்தில் கருடாழ்வார் சன்னதி மற்றும் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்ட சக்கரத்தாழ்வார் மற்றும் சுதர்சன நரசிம்மர் சன்னதி உள்ளது. ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி குழல் ஊதும் கோபாலனாகவும்

பசுவுடன் மற்றும் காளிங்க நர்த்தன கண்ணனுடன் குழந்தைப்பேறு அளிக்கும் சந்தான ஆலிலைக் கண்ணனாகவும் அருள்பாலிக்கின் றார். திருமால் ஆலயத்தில் நவகிரக சன்னதி அமைந்திருப்பது அரிது. பக்தர்களின் நேர்த்தி பரிகாரத் தல மாக நவகிரக சன்னதி உள்ளது.

**ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயில், தஞ்சாவூர்.**

இவ்வாலயம் 600 ஆண்டுகள் பழமையானது. இங்கு மூலவராக வேங்கடாஜலபதி தனிச் சந்நதியில் பத்மாவதித் தாயார், பஞ்சமுக ஆஞ்சநேயர் மற்றும் மஹா விஷ்ணு வின் தசாவதாரப் பெருமாள்களின் சன்னதிகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி விழா விமரிசை யாக நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் வைகுண்ட ஏகாதசி விழா வின்போது அன்று காலை திருமஞ் சன சேவையும், இரவு திருவாராதனை, நாச்சியார் திருக் கோலத்துடன் பெருமாள் புறப் பாடு, பெருமாள் யதாஸ்தானம் சேர் தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடக்கிறது.

**ஸ்ரீஅந்தரங்க வேங்கடேசப் பெருமாள் கோயில், சென்னை**

இக்கோயிலில் அந்தரங்க வேங்கடேசப் பெருமாள், தாயார் சன்னதிகளும், ஆஞ்சநேயர் உப சன்னதியும் உள்ளன. இக்கோயில் குழுக் கோயில் என்ற வகைப்பாட் டில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மரபு சாராத அறங்காவலர் அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கோயி லில் இரண்டு கால பூஜைகள் நடக்கின்றன. புரட்டாசி மாதம் 10ஆம் நாள் ஸ்வாமி வீதி புறப்பாடு



## தீபஒளியில் தீபாவளி

"விளக்கொளி பெருமாள்" என்ற பெயருள்ள திருமால் தலம் ஒன்று திருக்காஞ்சியில் உள்ளது. *''வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்து விளக்கு''* என்றும், *''நந்தா விளக்கே''* என்றும் திருமால் அடியார் பாடுவர். *''வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யக்கதிரோன் விளக்காக''* வைத்துப் புறவிருள் போக்கினார் காஞ்சி பொய்கையார் என்னும் முதல் ஆழ்வார்.

*''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகுசிந்தை இடுதிரியா நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றி''* அக இருள் நீக்கி நாராயணனைத் தொழுதார் கடல்மல்லை பூதத்தார்.

புற இருளும், அக இருளும் விலகும்போது, கண்ணுக்கும் மனித இதயத்துக்கும் விளங்கும் சோதியை *''திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கன் அணி நிறம் கண்டேன், செருக்கிளரும் பொன் ஆழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன் என் ஆழி வண்ணன் பால் இன்று''* என இறைவனைத் தம் அகத்தும் புறத்தும் கண்டமை காட்டினார் மயிலைப் பேயாழ்வார்.

குத்து விளக்கு, கோல விளக்கு, கொடி விளக்கு, குடவிளக்கு, அணி விளக்கு, மணி விளக்கு, அகண்ட விளக்கு, நந்தா விளக்கு, தோரண விளக்கு, பதுமை விளக்கு என்றபடி "இலட்ச தீபங்கள்" கலையழகுடன் உருவாயின. இருள் நீக்கிப் பொருள் காட்டி, காட்சிகளில் எழில் கூட்டி, வாழ்வில் சுவையூட்டி, அறிவில் செம்மை சேர்த்து மனிதனின் அறிவுப் பசியோடு, வயிற்றுப் பசியைப் போக்கி ஞான ஒளி உணவு படைக்கிறது.

அடியார் ஏற்றிய தமிழ்த் திருவிளக்கில் தீப ஒளி நாளில் நாமும் இறைவனை வழிபட்டு தீபாவளியைக் கொண்டாடுவோம்.

*நன்றி - பகவத் விஷய கட்டுரைகள் (பாகம்-1)*

**அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்**



முக்கிய திருவிழாவாக நடைபெறுகிறது. மார்கழி மாதம் ஸ்வாமி தரிசனம் திருவிழாவாக நடைபெறுகிறது. இப்பெருமாள் கோயில் சென்னை யானை கவுனி பகுதியில் சவுகார்பேட்டையில் உள்ளது.

### சஞ்சீவராயர் மலை வேங்கடேசப் பெருமாள் கோயில், காட்பாடி

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரம் ஊராட்சியில் உள்ளது சஞ்சீவராயர் மலை. இங்கு மிகவும் பழமை வாய்ந்த பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது.

மூலவர் சுயம்பு. அதனால் இது சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மலை மீது அமைந்த இந்த ஆலயத்தை அடைய 520 படிகளைக் கடந்து செல்ல


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையானின் அக்ஷர தீபிகை

ஸப்தகிரி



எழுத்து மலரால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனை தரிசிப்பதற்கும், அவரைச் சென்று அடைவதற்கும் எத்தனையோ வழிகள்.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி"யைப் படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.


### 2024, நவம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | ஸ்ரீகேதார கௌரி விரதம். |
| 03 | திருமலை நம்பி சாத்துமுறை. |
| 05 | நாகுல சதுர்த்தி. |
| 09 | திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார் திருநட்சத்திரம், வேதாந்த தேசிகர் சாத்துமுறை. |
| 10 | பேயாழ்வார் திருநட்சத்திரம். |
| 11–14 | நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 13 | கைசிக துவாதசி. |
| 15 | கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் அன்னாபிஷேகம். |
| 15 | நகரி ஸ்ரீகரியமாணிக்க ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 28–டி.6 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம். |
| 28 | தன்வந்தரி ஜெயந்தி. |

வேண்டும். பழங்காலத்தில் உள்ள சுயம்பு மூர்த்தியுடன், நின்ற கோலத்தில் அருள்பாலிக்கும் பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் சிலை சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டுள்ளது.

ஆனந்த நிலையம் என்ற சிறிய கருவறையில் பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அவர் எதிரே பெரிய திருவடியான கருட பகவான் வீற்றிருக்கிறார். திருக்கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் பழமையான கொடி மரமும், அதற்கு அருகில் ஆஞ்சநேயருக்கு தனிச் சன்னதியும் உள்ளது.

### வேங்கடேசப் பெருமாள் கோயில், பரமேஸ்வரன் பாளையம்

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூருக்கு அருகில் உள்ள பரமேஸ்வரன் பாளையம் என்ற சிற்றூரில் அமைந்துள்ள பழமையான திருக்கோயில். இக்கோயிலில் வேங்கடேசப் பெருமாள் என்ற பெயருடன் ஸ்ரீதேவி, பூதேவி இருவருடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு முகமாகக் காட்சி தருகிறார் இப்பெருமாள். ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திலும்,

அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்திலும் கோபுர துவா ரத்தின் வழியாக சூரிய ஒளி பெருமாள் மீது விழுவதால் அக்காலங்களில் சூரியன் பெருமாளை வழிபடுவதாகத் தொன் நம்பிக்கையாக உள்ளது.

### அருள்மிகு பிரசன்ன வேங்கடேசப் பெருமாள், திருப்பாற்கடல்

ராணிப்பேட்டை மாவட்டத்தில் திருப் பாற்கடலில் அமைந்துள்ளது. பழங்காலத் தில் காரபுரம் என்று அழைக்கப்பட்ட திருப்பாற்கடல் கிராமம், பசுமையான வயல்களால் சூழப்பட்ட பகுதியாகும். உள்ளூர் பாரம்பரியத்தின்படி, காஞ்சிபுரத் தில் தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கு பிரம்மா நடத்திய யாகத்தைத் தடுத்திட முற்பட்ட வேகவதி என்று அழைக்கப்படும் சரஸ்வதி நதியைத் தடுக்க விஷ்ணு ஆதி சேஷ மலையில் தங்கிய தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

### தென்திருப்பதி ஸ்ரீபிரசன்ன வேங்கடாசலபதி ஆலயம், துறையூர்

திருச்சி அருகில் துறையூரில் இருந்து பெரம்பலூர் செல்லும் வழியில், 3 கி.மீ. தொலைவில் உள்ள பெருமாள் மலையில், பிரசன்ன வேங்கடாசலபதி கோயில் கொண்டிருக்கிறார். இம்மலை சுமார் 1564 படிகள் கொண்டுள்ளது. அடிவாரத்தில் இருந்து மலைக் கோயிலுக்கு 5 கி.மீ. தொலைவிற்குத் தார்ச்சாலையில் வாகனத் திலும் செல்லலாம். இத்தலத்தில் ஸ்ரீதேவி சமேதராக பிரசன்ன வேங்கடாசலபதி திருக்காட்சி தருகின்றார். கோயிலின் தல விருக்ஷம் இலந்தை மரம்.

### ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் திருக் கோயில், மொண்டிபாளையம்

மூலவர் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள், தாயார் – ஸ்ரீஅலர்மேல் மங்கை. மண்டபத் துடன் கூடிய தீபஸ்தம்பத்துடன் கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. சுதையில் நுழைவு வாயில். பலிபீடம், துவஜஸ்தம்பம், கருடாழ்வார், கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் மற்றும் முகமண்ட பம் / ரங்க மண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சன்னதி ஒரு பாத பந்த அதிஷ்டானத்தில் உள்ளது. கருவறை 3 அடுக்கு விமானம் கொண்டது. கருவறையில் உள்ள மூலவர் சாளக்கிராம சுயம்பு, உற்சவர் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் உள்ளார்.

வெளிப்பிரகாரத்தில் வேணுகோபால ஸ்வாமிக்கு பாமா, ருக்மணி, சக்கரத்தாழ்வார், ஆஞ்சநேயர், ஆழ்வார்கள், விநாயகர், தும்பிக்கை ஆழ்வார், மஹாலக்ஷ்மி, பெருமானின் தசாவதார மூர்த்தங்கள், சனீஸ்வரர், வைகுண்ட நாராயண மூர்த்தி, பெருமாளின் திருவடிகள், இது தவிர சொர்க்க வாசல், மடப்பள்ளி, யாகசாலை, கல்யாண மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன.

மூலவர் திருப்பதி ஸ்ரீவேங்கடேசப் பெருமாளுக்கு நிகரான சக்தி வாய்ந்தவர் என்பது நம்பிக்கை. கோயம்புத்தூரில் இருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில் 45 கி.மீ. தொலை வில் மொண்டி பாளையம் பெருமாள் கோயில் அமைந்து உள்ளது.

### அருள்மிகு ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் திருக்கோயில், பெருமாள் மலை

நான்கு திசைகளில் முருகப் பெருமான் அருளாட்சி நடத்திட, மத்தியில் உள்ள மலையில் அவரது தாய் மாமன் பெருமாள் திருக்கோயில் கொண்டு சேவை சாதிக்கிறார். இதனை பெருமாள் மலை என்பர். சுமார் ஆயிரம் ஆண்டுக ளுக்கு முன்பு பாண்டிய மன்னர்கள் இதைக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.

இராமாநுஜர் இங்கு பெருமாளைத் தரிசித்திருப்பதும், மூன்று ஆஞ்சநேயர்கள் இங்குச் சேவை சாதிப்பதும் விசேஷ மாகக் கருதப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் அருகில் இந்த பெருமாள் மலை அமைந்துள்ளது.


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்து வதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும் போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

பிரம்ம தேவன் முன்னிலையில் ஸ்ரீநிவாசனுக்கு பிரம்மாண்டமாகத் தேர்த் திருவிழாவும், இறுதி நாளில் அவரின் அவதார தினமான புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று ஸ்வாமி புஷ்கரணியான திருக்குளத்தில் தீர்த்தவாரியோடு பிரம்மோத்ஸவம் நிறைவு பெற்றது. பின்னர் ஸ்ரீநிவாசன், பிரம்மா, ருத்திரர் முதலான திக்பாலகர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். திருவோண நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் சக்கராயுதத்திற்கு தீர்த்தவாரி நடைபெற்ற ஸ்வாமி புஷ்கரணியில் யாரெல்லாம் புனித நீராடுகிறார்களோ அவர்களுக்கு முற்பிறவியில் செய்த பாவங்கள் எல்லாம் அழிந்து போகும். அதுமட்டும் அல்ல புனித நீராடிய காரணத்தால் புண்ணியவான்கள் ஆவார்கள். இம்மையிலும் மறுமையிலும் சுக வாழ்க்கை வாழ்வார்கள். இது சத்தியம் என்றவுடன் பிரம்மாவும், பரமசிவனும் கூட இது உண்மைதான் என்றார்கள். அதன்பின்பு ஸ்வாமி கோயிலில் உள்ள கல்யாண மண்டபத்தில் அமர்ந்தருளினார்.

பிரம்மோத்ஸவத்தில் இறுதியாக செய்ய வேண்டிய வேள்விகளை எல்லாம் சாஸ்திர முறைபடி செய்தார்கள். அதன் பிறகு ஸ்வாமி தங்க சிம்மாசனத்தில் அமர்ந்து அருளினார்.

பிரம்மா! உன் எண்ணம் நிறைவேறியது. எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீ முன்னிருந்து நடத்தியதால் இது போன்ற உத்ஸவங்கள் உன்னுடைய பெயரிலேயே நடைபெற்று பேரும் புகழுடன் விளங்கும்.

மேலும், நீ விரும்பி செய்வித்த இந்த பிரம்மோத்ஸவத்திற்கு வந்தவர்கள், பிரம்மோத்ஸவ வைபவத்தைக் கண்டு களித்தவர்கள் மறுபிறவி இல்லாமல் நிலையான ஆனந்தத்தை அனுபவிப்பார்கள். அவர்களை நான் எப்பொழுதும் பாதுகாப்பேன்.

என் திருவடிவத்தை தியானிப்பவர்களுக்கும், என் கீர்த்தனைகளைப் பாடுபவர்களுக்கும், அடுத்த சிந்தனை ஒன்றுமில்லாது என் மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கும், பக்தியோடு என்னிடம் வந்து வேண்டுபவர்களுக்கும் எப்பொழுதும் நான் துணையாக இருப்பேன். அவர்களுக்கு உண்டாகும் ஆபத்துகளைப் போக்கி, வேண்டும் வரங்களைக் கொடுப்பேன்.

மேலும், அனைத்து செல்வங்களோடு முக்திபேறும் கிடைக்கப் பெறுவது உறுதி. என் மீது வைக்கும் நம்பிக்கைக்குத் தக்கவாறு பலன் உண்டாகும். இந்த வேங்கடகிரியில் எவரொருவர் அன்னதானம், வீடு தானம், பாத்திர தானம், பொருள் தானம் செய்கிறார்களோ அவர்களுக்கு பூலோகத்தில் சகல சௌபாக்கியங்களும் வந்தடையும்.

ஸ்ரீஹரி சிவன், இந்திராதிகள் பக்கம் திரும்பி "சிறப்புக்குரியோரே! கன்னி ராசியில் நடைபெறும் பிரம்மோத்ஸவங்கள் ஒவ்வொரு வருடமும் நடைபெற வேண்டும். நீங்கள் அனைவரும் தவறாமல் வரவும். உங்கள் எல்லோருடைய உதவியோடு சிறந்த வைபவமாகத் தொடர வேண்டும் என்றார்.

மேலும், நான்கு வருணத்தாரையும் அழைத்து அவரவர் கடமைகளை நினைவுபடுத்தி அவரவர்கள் செய்யும் தொழிலில் தர்மத்தை கடைபிடித்து வர வேண்டும் என கட்டளையிட்டார். அவரவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்து நீங்கள் எல்லோரும் உங்கள் ஊருக்குச் சென்று மீண்டும் வரும் பிரம்மோத்ஸவத்திற்கு தவறாமல் வருக!" என்றார். மேலும் கர்மம், ஞானம், பக்தி, தர்மம் ஆகியவற்றின் நுணுக்கங்களை மிகவும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பிரம்மனே! நீ சத்திய லோகத்திலிருந்து இங்கு வந்து நீண்ட காலமாகி விட்டது. நீ இங்கேயே இருந்து பிரம்மோத்ஸவத்தை பிரம்மாண்டமாக நடத்தி முடித்தாய். நான், ஸ்ரீ,பூ, நீளா தேவி எல்லோரும் மிகவும் மகிழ்ந்தோம். நான் இந்த சேஷாத்ரியிலேயே இருப்பேன். ஆயினும் உனக்கு நான் என்ன வரம் கொடுக்க முடியும்? என்றார்.

அப்பொழுது பிரம்மா..."ஜனக! எனக்கு எத்தனையோ வரங்களைக் கொடுத்தீர்கள். என் வார்த்தைக்கு மதிப்பு தந்து என்னை கௌரவித்தீர். எனக்கு எந்தவொரு குறையுமில்லை. தாங்கள் இங்கேயே இருந்து அறியாமையால் நரகத்தில் விழும் மனிதர்களை நரகத்தில் விழாமல் காத்து வந்தாலே போதும். அதுவே தாங்கள் எனக்குக் கொடுக்கும் வரம். வேறு வரம் எதுவும் எனக்கு வேண்டாம்!" என்று கூறினார்.

அதற்கு ஹரி, தனயா! என் பக்தர்களுக்கு யாராவது துன்பம் செய்தால் அதைப் பார்த்துக் கொண்டு நான் அமைதியாக இருக்க மாட்டேன். அவர்களை நிச்சயம் தண்டிப்பேன். எவ்வளவு பெரிய பாவ காரியம் செய்தவனாயிருந்தாலும் என்னிடம் சரணடைந்தால் நிச்சயம் நான் அவனைக் காப்பேன். தீயோர்களைத் தண்டிப்பதற்கும், நல்லோர்களைக் காப்பதற்கும் கலியுகம் முடியும் வரை நான் இந்த சேஷாசலத்திலேயே இருப்பேன். இனி நீ சத்திய லோகத்திற்குச் சென்று உன் படைப்புத் தொழிலை செய்து வருவாயாக என்று கூறினார். பிறகு இந்திரன் பக்கமாகத் திரும்பி "தேவேந்திரா! நீயும் உன்னவர்களோடு சொர்க்கத்திற்குச் செல்வாயாக. இனி உனக்கு எல்லாம் வெற்றியே உண்டாகும்" என்றார்.

பிறகு சிவபெருமானைப் பார்த்து, "கிரி நாயகனே! என் பிரம்மோத்ஸவத்திற்கு எல்லா வகையிலும் உதவி செய்தாய். எனக்கு பரமானந்தம். இனி நீ வெள்ளி மலைக்குச் சென்று பக்தர்களைக் காப்பாயாக" என்றார். இவ்வாறாக பரமசிவனுக்கும், அகஸ்திய முனிவர், சனகாதி முனிவர்கள் அனைவருக்கும் ஸ்ரீஹரி அறிவுரை வழங்கியதோடு அவர்களுக்கு விடை கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே. சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 99க்கான விடைகள்


| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | னு | ம | ந் | த | வா | க | ன | ம் | 2 சூ | | |
| 3 சு | ப | த | ம் | நு | ழை | வா | யி | ல் | ரி | | 4 தீ |
| ப் | 5 ல | ட் | டு | பி | ர | சா | த | ம் | ய | | ர் |
| ர | 6 ஸ்ரீ | ம | | 7 ச | க் | க | ர | க்ஷ | பி | ர் | த் |
| பா | நி | ம் | ம் | து | | 8 ஹ | ஷ | ரு | ர | யா | த |
| த | வா | ர | ன | ர் | 9 மோ | ம் | சே | வி | பை | தா | வா |
| ம் | ச | 10 பி | க | வே | கி | ச | ய | ப | வா | த் | ரி |
| வ | ன் | | வா | த | னி | | றி | ல் | க | தி | உ |
| ச | க | 11 சொ | ஜ | | ம | ம் | 12 சி | 13 க | ன | வ | ற் |
| ற் | மு | ர் | 14 க | ரு | ட | வா | க | ன | ம் | மா | ச |
| தோ | ன் | ண | ஷ் | ரு | கி | த | நீ | வ | 15 ந | த் | வ |
| 16 ர | 17 நா | த | நீ | ரா | ஜ | ன | ம | ண் | ட | 18 ப | ம் |

# அலிபிரி அடிவாரத்தில்...

நித்ய கல்யாணம் பச்சைத் தோரணமாக விளங்கக்கூடிய திருமலையில் கலியுக கண்கண்ட தெய்வமாக திருவேங்கடவன் எழுந்தருளி அருள் புரிந்து வருகின்றார். அந்த வேங்கடவனைத் தரிசிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாள்தோறும் நடந்தும் செல்கின்றனர். அவ்வாறு நடந்து செல்கையில் அலிபிரி நடைபாதையில் பல அரிதான இடங்களை நாம் தரிசித்து நம் நடைபயணத்தைத் துவங்கலாம். ஏழுமலையானது திருவேங்கடவன் குடிகொண்டுள்ள கலியுக வைகுந்தம் ஆகும். அந்த மலையடிவாரத்தின் தொடக்கத்திலே வணங்கிய திருக்கோலத்தில் வானுயர நின்றிருக்கும் கருடாழ்வாரை அனைவரும் வணங்கிப் பின்னர் திருவேங்கடவனை தரிசிக்க திருமலை ஏற வேண்டும்.

பசுமை நிறைந்த மலைச் சிகரங்களின் கீழ் கோபுரங்களுக்கு நடுவே சிற்பக்கலை நிறைந்த மண்டபங்களோடு அழகாகக் காட்சியளிக்கின்றது அலிபிரி. அதாவது திருமலையின் அடிவாரம். திருமலைக்கு மேலே செல்வதற்கும், கீழே இறங்குவதற்குமான மலைப் பாதைகளுக்கு இடையில் இருப்பதுதான் நடைபாதை.

அலிபிரியைத் தமிழில் "அடிப்புளி" என்றும், "அடிப்படி" என்றும் அழைப்பர். "அடி" என்றால் "முதல்", "படி" என்றால் "ஏறும்படி" என்று பொருள் கொள்ள வேண்டும். "அடிப்படி" என்றால் "முதல்படி" எனப் பொருள்.




### ஸ்ரீவாரி திருப்பாத (பாதால) மண்டபம்

முன்னொரு காலத்தில் இங்கு ஓர் புளிய மரத்தின் கீழ் பகவத் இராமாநுஜர் அவரது தாய்மாமன் திருமலை நம்பிகளிடம் இராமாயண அர்த்தங்களைக் கேட்டறிந்து வந்தார். ஒரு நாள் இராமாயண அர்த்தங்களை உபதேசித்து கொண்டிருக்கும் பொழுது ஸ்வாமிக்கு அர்ச்சனைக்கான நேரம் ஆனதால் எம்பெருமானே நேராக இங்கே வந்ததாகவும், வந்ததற்கான அடையாளமாக தன் திருப்பாதச் சின்னங் களை இங்கேயே விட்டுச் சென்றதாகவும் கூறுவர். அழகிய சிற்பக்கலையோடு இந்தத் திருப்பாத மண்டபத்தை விஜய நகர மட்ல குமார அனந்தராஜா கட்டுவித்தார்.

எவனொருவன் திருவேங்கடவனை சரணாகதி செய்கின்றானோ அவனை அந்த திருவேங்கடமுடையான் ஒரு பொழுதும் கைவிடமாட்டார் என்பதை உணர்த்தும்


**– திருமதி எஸ். திருவேணி,**
**நங்கைநல்லூர்.**

வகையில் திருப்பாத மண்டபத்திற்கு முன்பாக சற்று கீழே சாஷ்டாங்கமாக ஒரு பக்தன் வணங்கும் வகையில் ஓர் சிற்பம் உள்ளது. விஜய நகர சக்ரவர்த்தி சாளுவ நரசிம்மராயுலு திருமலைக்குச் செய்த பக்தித்தொண்டில் அலிபிரி வழிபாதையில் கோயில் கோபுரங்கள் எழுப்பியது ஒன்றாகும்.

“திருவடி முதல் திருமுடி வரை தரிசனம் செய்தல் வேண்டும்” என்பது சான்றோர் வாக்கு.

*ஸந்த:*
*ஶ்ரீரங்கப்ருத்வீசக்ரணத்ராணசே கரா:*
*ஜயந்தி புவனத்ராணபங்கஜரேணவ:*

ஶ்ரீரங்கநாதருடைய பாதுகைகளை பரம சந்தோஷத்துடன் தம் சிரஸில் வைத்துக்கொள்கிற பெரியோர்களுடைய திருவடித்தூள் எல்லா லோகத்தையும் காப்பாற்றுகின்றது. அப்பேற்பட்ட பெரியோர்கள் மிகவும் உயர்ந்தவர்களாக இருப்பர். பரதாழ்வாரால் ஶ்ரீராமருடைய பாதுகைக்கு எவ்வளவு சக்தி, பக்தி இருக்கிறது என்பதை உலகம் அறிந்த உண்மை. திருப்பாத சேவை செய்து அனுமன் ஶ்ரீஹரிக்கு முதன்மை பக்தனாகி திருப்பாத சேவையின் மகிமையை நம் எல்லோருக்கும் உணர்த்தி உள்ளார். அத்தகைய சிறப்பு மிக்க திருப்பாதங்களை தலையில் சுமந்து சென்று நம் பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கும் சேவை இங்கே இந்தத் திருப்பாத மண்டபத்தில் இருப்பது நாம் பெற்ற அரிய பெரும்பாக்கியமே என்று கூறலாம்.

திருவேங்கடமுடையானின் திருவுருவச் சிலையும் இங்கு பிரதிஷ்டைச் செய்து, சனிக்கிழமை தோறும் சிறப்பு பூஜைகள் நடத்தியும் வருகின்றனர்.

இங்குள்ள மண்டபத்தில் திருவேங்கடவனின் திருப்பாதத்தைத் தரிசனம் செய்யலாம். வெள்ளிக்கிழமைதோறும் கவசங்கள் நீக்கப் பெற்று நிஜ பாத தரிசனமும் செய்யலாம். அலிபிரி மண்டபத்திலுள்ள ஸ்வாமியின் திருப்பாதங்களை பக்தர்கள் தம் தலைமீது சுமந்து பக்தியோடு கோயிலை வலம் வந்து தத்தம் வேண்டுதல்களை பாத சமர்ப்பணமாக செய்வர். இங்கு பக்த ஆஞ்சநேய ஸ்வாமியும் தரிசனமளிக்கின்றார்.

## ஶ்ரீலக்ஷ்மி நாராயண ஸ்வாமி ஆலயம்

திருப்பாத மண்டபத்திற்கு கிழக்கே, வடக்குத் திருமுகமாக அமைந்துள்ள ஆலயத்தில் ஶ்ரீலக்ஷ்மி நாராயணர் அமர்ந்த நிலையில் அருளுகின்றார். இந்த ஆலயம் 16ஆம் நூற்றாண்டில் ஶ்ரீநரசிம்ம ராயர் கட்டினார். இங்கு நித்ய பூஜைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அபிஷேகம், நைவேத்தியம் முறைபடி நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயத்தில் கோதாதேவி, பெரியாழ்வார் சன்னதியும் அமைந்துள்ளது. அழகான இயற்கை எழில் நிறைந்த இந்த ஆலயம் மலை ஏறுபவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும் விதமாக அமைந்து உள்ளது.



அதற்கு அடுத்த நிலையில் படியேறும்போது கண்ணுக்கு விருந்தாவது அழகிய சிற்பக் கலைகள் நிறைந்த பெரிய கோபுரம்.










விண்ணை முட்டும் அளவிலான இக்கோபுரத்தை அமைத்தவர் சாளுவ நரசிம்மராயர்.

இந்தப் பெரிய கோபுரத்திற்கு அடுத்தபடியாக காட்சி கொடுப்பது இடது புறம் அமைந்துள்ள தசாவதாரங்களில் ஒன்றான மச்சாவதார விஷ்ணு கோயில். படி மார்க்கத்தில் மகாவிஷ்ணுவின் அனைத்து தசாவதார சிலைகளையும் நாம் தரிசிக்கலாம்.

### சப்த கோ பிரதக்ஷணை மந்திரம்

தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் தோன்றிய காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள்இங்கு உள்ளன. இந்த பசுக்களுக்கு தீவனம் கொடுக்கலாம். இந்த பசுக்களுக்கு “கோ” பூஜையும் செய்யலாம். அல்லது “கோ” தரிசனம் செய்து கோமாதாவை ஏழு முறை சுற்றி வந்த பின் மலையேறத் துவங்கலாம்.

இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பும் இங்கு உள்ளது.

### ஸ்ரீஸ்ரீநிவாச நித்ய அனுக்ரஹ ஹோமம்

வைஷ்ணவ சம்ப்ரதாயத்தின்படி “ஸ்ரீ” என்றாலே பிராட்டியார் என்றே பொருள்படும். கூரத்தாழ்வார் ஒரு தனியனில்,

*‘‘லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாதயாமுந*
*மத்யமாம்*
*அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு*
*பரம்பராம்’’*

“ஸ்ரீ” நிவாஸர் என்பதற்கு ஸ்ரீதேவி நித்யவாசம் செய்யும் திருமார்பை உடையவர் என்று பொருள். இதனை நம்மாழ்வார், *‘‘அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா’’* என்று திருவாய் மொழியில் போற்றுகின்றார்.

மந்தி பாயும் திருவேங்கடம் என்று ஆழ்வாரின் பாசுரத்தில் பாடியுள்ளபடி வானரங்கள் ஓடித்திரியும் திருமலை ராஜகோபுரத்தின் அடிவாரத்தில் திருமலையானின் அனுக்ரஹம் பக்தர்களுக்கு தினமும் கிடைப்பதற்கு தி.தி.தே. ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது. இங்கு ஸ்ரீநிவாச நித்ய அனுக்ரஹ ஹோமம் நடத்துகின்றனர். ஹோமம் மற்றும் திருமலை தரிசனத்திற்கு கட்டணம் செலுத்தி, ஹோமம் செய்த பின்னர் திருவேங்கடமுடையானை சிறப்பு நுழைவு தரிசனம் வாயிலாகச் சென்று தரிசிக்கலாம்.









# அக்டோபர் 2024 ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழிலில் கடுமையாக உழைத்தால் நல்ல லாபம் கிடைக்கும். கணவன் மனைவியிடையே நல்லுறவு உண்டு. பாக்கிகள் வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நேர்முகத் தேர்வில் வெற்றி கிட்டும். சகோதரர்கள் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மொத்தத்தில் யோகமான மாதமிது.

**ரிஷபம்**

குழந்தைகளுக்கு முன்னேற்றமும், ஆரோக்கியமும் உண்டு. தொழில்துறையில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வீடு, வாகனம், மின்னணு, மின்சாரப் பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. பாக்கிகள் வசூலாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். திடீர் யோகம் பெறும் மாதமிது.

**மிதுனம்**

தொழில்துறையில் எதிர்பார்த்த நல்ல வளர்ச்சி கிடைக்கும். கடும் அலைச்சல் காரணமாக உடல் அலர்ஜி ஏற்படும். தந்தையிடம் சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டுச் சரியாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் சுபச்செலவுகள் நடக்கும். அதற்குரிய வருமானமும் கிடைக்கும். குழந்தைகள் நல்ல முன்னேற்றம் பெறுவர். வேலையில் மாற்றம் நிகழும் மாதமிது.

**கடகம்**

எந்தக் காரியம் துவங்கினாலும் சிறு தடை ஏற்பட்டு பின்னர் சரியாகும். கணவன் மனைவியிடையே சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு பின் சரியாகும். குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். புதிய முயற்சிகளில் தோல்வியும் மறு முயற்சியால் வெற்றியும் கிட்டும். சிறிதளவில் மருத்துவச் செலவுகள் உண்டு. எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

தொழில்துறையில் மாற்றம் உண்டு. குடும்ப பிரச்சனை குறையும். மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தாராள பணபுழக்கம் உண்டு. சகோதர வழியில் நன்மையுண்டு. மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண் பெறுவர். வெகுகாலம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனம் வாங்க வேண்டாம். முயற்சியால் வெற்றி பெறும் மாதமிது.

**கன்னி**

தொழில்துறையில் அலைச்சலும் வளர்ச்சியும் உண்டு. புத்திசாலித்தனமாக யோசித்து காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். குழந்தை பாக்கியம் உண்டு. தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பலவிதத்தில் வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

நினைத்த காரியத்தைச் சாதீப்பீர்கள். மனைவியால் தனலாபமும் உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். கூட்டமான இடங்களுக்குச் செல்லாதீர். தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். புது வாகனம், மின்சாதனப் பொருட்கள் வாங்குவீர். எச்சரிக்கையுடன் வெற்றி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

அடிக்கடி நல்ல காரியங்களுக்கு பயணம் செய்வீர். குடும்பத்தில் சுபச்செலவுகள் நடக்கும். தொழில் துறையில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. உத்தியோகத்தினருக்கு பதவி உயர்வு உண்டு. தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நண்பர்களால், உறவினர்களால் சிறு பிரச்சனை ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தெய்வ அனுக்கிரகத்தால் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

கடுமையாக உழைத்து எதிரிகளை வெற்றிக் கொள்வீர். தொழிலில் புது முயற்சிகள் மேற் கொள்ளலாம். ஆனால் கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். சகோதரரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குடும்பத்தில் அமைதி நிலவும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**மகரம்**

திருமணம் கைக்கூடும். தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் பதவி உயர்வு உண்டு. பெற்றோரின் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். முயற்சிகளால் வெற்றி பெறும் மாதமிது.

**கும்பம்**

பிடிவாதமாக காரியங்கள் செய்து வெற்றியும் பெறுவீர். தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். ஆரோக்கிய குறைபாட்டிற்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். கணவன் மனைவியிடையே பிணக்குகள் தீரும். புது முயற்சிகளில் கஷ்டப்பட்டு வெற்றி பெறுவீர். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் நல்ல மதிப்பெண் பெறுவர். அலைச்சலில் வெற்றி பெறும் மாதமிது.

**மீனம்**

வரவிற்கேற்ற செலவு உண்டு. சகோதரர்களால் நன்மையுண்டு. வாகனம், மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனம் வாங்குவதைத் தவிர்க்கவும். பயணங்களால் அலைச்சல் ஏற்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழிலில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். முன் கோபத்தைத் தவிர்க்கவும். தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.



வங்காள விரிகுடா, இந்து மஹா சமுத்திரம், அரபிக்கடல் என முக்கடலும் சங்கமமாகும் இந்தியாவின் தென் மூலையான கன்னியா குமரியின் கடற்கரை யில் தி.தி.தேவஸ்தானத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஆலயம்

# குமரியில் திருமலையப்பனின் திருலீலை

– திரு.அ.கிருஷ்ணன்,
வீரவநல்லூர், 9486300266

எங்களது முன்னோர்களின் வழிகாட்டுதலின் படியே சிறுகச்சிறுக சேமித்த பணத்தை ஏழுமலையான் தரிசனம் காணச் செல்லும் சமயம் உண்டியலில் சேர்ப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளோம். உண்டிய லில் சேர்ந்திருந்த தொகையைக் காணிக்கையாகச் செலுத்தி, ஸ்வாமி தரிசனம் காண வேண்டி இருமுறை பயணச் சீட்டை பதிவு செய்தும் தரிசனத்திற்குச் செல்ல இயலாமல் தடை ஏற்பட்டது.

குமரி வட்டம் சுசீந்திரம் ஊரில் புதிதாய் வீடு கட்டி கிரஹப் பிரவேசத்திற்கு என் மகனின் சகலை எங்களை அழைத்திருந்தார். நாங்களும் குடும்பத்தினரோடு விழாவிற்கு வாகனத்தில் சென்றோம்.

புதுமனை புகுவிழாவில் பங்கு கொண்டு விருந் தோம்பலுக்கு பின்னர் ஊருக்குக் கிளம்புகையில், உறவினர் ஒருவர் இங்கிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள கன்னியாகுமரிக்குச் சென்று விட்டு பிறகுச் செல்லலாமே எனக் கூற நாங்களும் அங்கு சென்றோம்.

அங்கு திருமலை தேவஸ்தானத்தினரால் புதிதாய் நிர்மாணித்திருந்த திருவேங்கடவன் ஆலயம் கண்டு அளவில்லா ஆனந்தமடைந்தோம். அழகுடன் அமைந்த ஆலயம் மாலை கதிரவனின் செந்நிறக் கதிர்கள் பட்டு ஒளிமயமாக ஜொலித்துக் கொண்டு இருந்தது எங்களை மெய்சிலிர்க்க வைத்தது.

சில படிக்கட்டுகளின் மேலேறி சென்றபிறகே ஆலயம் காண முடியும். மாலை வெயில் சுறு சுறுப்பைத் தந்தது. கடற்கரைக் காற்றும் இதமான குளுமையுடன் வந்து கொண்டிருந்தது. தரிசன நடைதிறந்தபோது முதல் வரிசையில் எங்களுக்கு இடம் கிடைத்த சந்தோஷம் வேறு! “கோவிந்தா...” என்ற பக்தர்களின் கோஷத்துடன் உள்ளே சென்றோம்.

திருவேங்கடவன் திவ்விய தரிசனம் கிட்டியது. மட்டில்லா மகிழ்ச்சியோடு ஸ்வாமியைப் பிரார்த்தித்தோம். திரும்புகையில் உண்டியல் கண்டு, சேர்த்து வைத்த காணிக்கை பணம் வீட்டிலல்லவா உள்ளது? என என்னுள் எண்ணம் எழுந்தது. அடுத்த வினாடியில் முயற்சித்தால் இங்கேயே செலுத்தி விடலாமே! என பதில் எண்ணமும் கூறியது.


சட்டைப்பையிலிருந்த பணத்தை எடுத்து எண்ணினேன். சரியாய் ரூ.750/– இருந்தது. மேலும் ரூ.500/– தேவைப்படுகிறதே என நினைத்தபடி அருகில் நின்ற மகனிடம் காணிக்கை இங்கேயே செலுத்தலாம் என நினைக்கிறோம். ரூ.500/– தேவைப்படுகிறது என்று கூறியவுடன் அவனும் மகிழ்ச்சியுடன் தந்த பணமும் சேர ரூ.1,250/– இணைத்து, எங்கும் நிறைந்த ஏழுமலையானே திருமலைக்குச் சென்று செலுத்து வதாகவே எண்ணி, செலுத்துவதை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு அருள்புரிய வேண்டுமென மனதார பிரார்த்தித்து காணிக்கையைச் செலுத்தி மகிழ்ந்தோம். எங்களுக்கு சுவையான அருட்பிரசாதமும் கிடைத்தது.

திருப்பதியில் இருக்கும் திருவேங்கடவன் தன்னை போன்று திருமலைக்குச் செல்ல இயலாதவர்களுக்காக இங்கு எழுந்தருளியுள்ளது அற்புதமானது தானே! என எண்ணத் தோன்றியது.

திருப்பதிக்குச் செல்ல முடியாத எங்களுக்கு மன நிறை தரும் பதிலைத் தந்த ஏழுமலையானைப் போற்றிப் புகழ்ந்த படியே இல்லம் வந்தடைந்தோம்.

# பல்சுவை பகுதி

## சித்திரப் பகுதி







மேலே குறிப்பிடப்பட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் தகுந்த எண்களை எழுதுங்கள்

1) தீபாவளி பண்டிகையுடன் தொடர்புடையவை
2) சரஸ்வதி பூஜையுடன் தொடர்புடையவை
3) பொம்மை கொலுவுடன் தொடர்புடையவை

## பாதையைக் கண்டுபிடி

இந்தச் சிறுவன் அங்கேயிருக்கும் சிறார்களுடன் சென்று விளையாட வழிகாட்டி உதவுங்கள். கணித விடைகள் 10 என்ற எண்ணிக்கையில் வரும் கட்டங்களை மட்டும் இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 +5 | 11 −2 | 10 −1 | 2 +8 | 23 −10 | 16 −6 | 12 +5 | 28 −3 |
| 15 −5 | 7 +2 | 19 −10 | 19 −9 | 14 −4 | 72 −62 | 48 −38 | 19 −2 |
| 6 +4 | 25 −15 | 32 −22 | 18 −8 | 35 −20 | 36 −27 | 1 +9 | 39 −2 |
| 7 +2 | 27 −17 | 4 +6 | 13 −3 | 22 −12 | 25 −16 | 3 +7 | 0 +10 |

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திச்சூடி"யைப் படிப்போமா!

மறவேல் சீர்மை, சொல்லேல் சுளிக்கச்,
விரும்பேல் சூது, செய் திருந்தச் செய்வன,
அறிந்து சேரிடம் சேர், திரியேல்
சையெனத்.

சீர்மை மறவேல், சுளிக்கச் சொல்லேல்,
சூது விரும்பேல்,செய்வன திருந்தச் செய்,
சேரிடம் அறிந்து சேர், சையெனத்
திரியேல்.

வினாடி வினா

### திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-27

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. கருட சேவையின்போது திருமலையப்ப ஸ்வாமிக்கு மலர்மாலையை அனுப்புபவர் ................................
2. திருமலையில் குருகாய்ப் பிறக்க ஆசைப்பட்டவர்................................................................
3. திருமாலை "உலகம் உண்ட பெருவாயா!" என்று போற்றும் ஆழ்வார்................................................
4. திருமலை அடிவாரத்தில் நம்மை வரவேற்கும் விதமாகக் காட்சியளிப்பவர்........................................
5. திருமலை பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாள் பாடப்படும் பிரபந்தம் ..............................................
6. திருமாலின் குணங்களைப் போற்றும் தயாசதகத்தை அருளியவர் ...................................................
7. உபதேச ரத்தின மாலையை அருளிச் செய்தவர்..........................................................................
8. திருமலையில் உள்ள அழகிய புவியியல் வளைவின் பெயர்........................................................
9. இராமாநுஜ நூற்றந்தாதியை அருளியவர்..................................................................................
10. திருமலையில் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்துமிடம்........................................................
11. இவ்வுலகிற்கே திலகமாக அமைந்துள்ள திருத்தலம்.....................................................................
12. "திருக்கண்டேன் பொன்மேனிக் கண்டேன்" எனப் பாசுரமிட்டவர் ..................................................
13. "வேங்கடாசல நிலையம் வைகுண்டபுர வாசம்" எனப் போற்றும் தாசர்.............................................
14. நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை அருளியவர் .........................................
15. திருமலை திருக்கோயிலில் தனிச்சன்னதி கொண்டிருக்கும் ஆசாரியர்...........................................

## வினாடி வினா போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.10.2024.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |




**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**



## சக்கரத்தைச் சுற்றுங்கள்!

## அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!






### விடைகள்

1) புரட்டாசி, 2) திருவோணம் , 3)கருட வாகனம், 4)கோதா தேவி (ஆண்டாள்),
5) ஏழுமலைகள், 6)வகுளா தேவி, 7)லட்டு பிரசாதம், 8)திருமலை திருப்பதி தேவஸ்தானம்.

## நீதியை அறிவோம்!



*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள், கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியைத் தெரிந்துக்கொள்ளுங்கள்!*

நீதி : அடுத்தவரை சிறுமைப்படுத்தாதே!

## படத்தைப் பார்ப்போம்! பெயரைக் கண்டுபிடிப்போம்!!





### விடைகள்

1) குத்து+விளக்கு = குத்துவிளக்கு
2) பார்+வதி = பார்வதி



# ஆணவம் கொள்ளாதே!

சித்திரக் கதை

கதை மூலம் :திருமதி வி. நாகவல்லி.
சித்திரம் :திரு. கே. துவாரகாநாத்.

கருடன் தன்னுடைய தாயான வினதையைத் தன் பெரிய அன்னையின் அடிமையில் இருந்து விடுவித்தான். அதன் பின் மகாவிஷ்ணுவிற்கு வாகனமானான். அதனால் அவனுக்கு ஆணவம் அதிகரித்தது. கருடனின் ஆணவத்தை அடக்க விஷ்ணு பாடம் புகட்டினார். இக்கதையை அறிவோம் வாருங்கள். கருடன் தன் தந்தையான காஸ்யபரிடம்...




அந்த விஷ்ணுவே கருடனின் ஆணவத்தை அழித்திடுவார். அதுவரை நாம் அமைதியாகவே இருப்போம்
என்று தேவர்கள் அமைதியாய் இருந்தனர். ஒருமுறை நாரதர் மகாவிஷ்ணுவைக் காண வரும்போது...
நாரதரே! வாருங்கள்! வாருங்கள்! இங்கே அமருங்கள்.
அப்படியே ஸ்வாமி! மிக்க மகிழ்ச்சி.
அப்போது மகாவிஷ்ணு அருகில் இருந்த கருடனை...
கருடா இங்கே வா.
விஷ்ணு கருடனின் தோள் மீது தனது ததிருக்கரத்தினை வைத்தார்.
இருவரிடையே உரையாடல் தொடர்ந்து கொண்டே இருந்தது.
ஐயோ! தோள் மிகவும் வலிக்கிறதே. இவ்வலியினைத் தாங்க இயலவில்லையே. ஐயோ! ஸ்வாமியும் என்னை விடவில்லையே.
சற்று நேரத்தில் கருடன் மயக்கமுற்றான்
கருடனுக்கு என்னவாயிற்று? மிகவும் களைத்து போய் விட்டானே. முகத்தின் மீது சிறிது நீரைத் தெளித்து எழுப்பி விடுங்கள்.
ஹா... நான் எங்குள்ளேன்? எனக்கு என்னவாயிற்று?
ஸ்வாமி! தங்களின் திருவிளையாடல் எனக்குப் புரிந்து விட்டது. தாங்கள் என் தோள் மீது திருக்கரத்தினை வைத்தவுடனே என்னால் தாங்க முடியவில்லை. ஆனால் தங்களை சுமக்கும்போது மட்டும் காற்றில் பறந்து விடுகிறேன். அனைத்தும் தங்களின் திருவருளே என்பதை அறிந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள். என்னுள் ஞானோதயம் பிறந்தது. தங்களின் திருப்பாத சேவகனாகவே தன்னை இருக்க அருள் புரியுங்கள்.
கருடா! இந்த அண்டசராசரங்கள் அனைத்தும் என்னுடையதே. படைப்பவனும் நானே என்பதைத் தெரிந்து கொள்.
மஹாவிஷ்ணுவை இரு கரங்கள் கூப்பி வணங்கி...
ஸ்வாமி! அனைத்தும் புரிந்தது. தங்களின் கட்டளையையே அடியேன் கடைபிடிப்பேன்.
எந்நிலையிலும் ஆணவத்தோடும், பிறரை சிறுமையோடும் காணுதல் கூடாது. பிறரை நாம் கௌரவித்து அவர்களால் நாம் கௌரவிக்கப்படுதல் வேண்டும்.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.
மேலும் தகவல்களுக்கு
0877- 2264543,
2264359

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



15-08-2024 முதல் 17-08-2024 வரை நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர். உடன் திரு.சி.எச். வெங்கய்யா சௌத்ரி ஐ.ஆர்.எஸ்., கூடுதல் செயலாட்சித் தலைவர் திருமலை.



16-08-2024 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் திருக்கோயிலில் நடைபெற்ற வரலக்ஷ்மி விரதம் பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



27-08-2024 அன்று திருப்பதியில் உள்ள கோசம்ரக்ஷணசாலையில் கோகுலாஷ்டமியை முன்னிட்டு கோ பூஜை செய்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதி யினர். உடன் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ.) திருமதி எம். கௌதமி ஐ.ஏ.எஸ். அவர்கள்



30-08-2024 அன்று திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் தெலுங்கு சிராவண மாதம் கடைசி வெள்ளிக்கிழமை அன்று ஸ்ரீகாமாக்ஷி அம்மனுக்கு மிகவும் வைபமாக நடைபெற்ற லக்ஷகுங்குமார்ச்சனைத் திருக்காட்சி



15-08-2024 அன்று தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக்கொடியை ஏற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி அவர்கள்.




07-09-2024 அன்று விநாயக சதுர்த்தியை முன்னிட்டு திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளுக்கு பிறகு நடைபெற்ற திருவீதி உத்ஸவத்தில் உற்சவ மூர்த்தி மூஷிக வாகனத்தில் உலா வந்த திருக்காட்சி.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-09-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

